Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்



# கண்ணோட்டம்

KANNODDAM

வெளியீடு :- 80 | பெப்ரவரி 2017 | விலை ரூபா :- 10.00




# பிலவு குடியிருப்பு

## மக்களின் காணிகளை விடுவி

**தமது சொந்த இருப்பிடங்களை விடுவிக்கக் கோரி போராடும் புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாக வடக்கு கிழக்கின் பல நகரங்களில் கவன ஈர்ப்பு மற்றும் உணவு தவிர்ப்பு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.**

மக்கள் தாம் பாரம்பரியமாக வாழ்ந்த நிலத்தை விடுவிக்கக் கோருகிறார்கள் பொது மக்களை படைக் கட்டமைப்புகளுக்கு அடுத்தபடியாக, இரண்டாம் பட்சமாகக் கருதும் மனநிலை துரதிஸ்டவசமாக இன்னும் இலங்கையில் மாறவில்லை. ஒரு நாட்டில் மக்களே முதன்மையானவர்கள் படை மக்களுக் காகவே தவிர அது மக்களை மிஞ்சிய தாக இருக்க முடியாது.

படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளில் முன்னுரிமை மக்களுக்கே அளிக்கப்பட வேண்டும். அரசகாணிகள் என்றால் கூட அது படைத்துறைக்கு தான் முன்னுரிமை என்பது எழுதப்படாத விதியாக இருப்பது சரியல்ல. இந்த விதி திருத்தப்பட வேண்டும். சமூகங்களின் நல்லிணக்கத் திற்கும் அது அவசியமானது.

வடக்கு கிழக்கில் படையினரின் ஆதிக்கத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் விடுவிக்கப்படுவது சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ள உதவும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

திரு. ஆனந்தசங்கரி அவர்கள் அந்த இடத்தில் விமானப்படை முகாம் அவசியம் தானா? என்று நியாயமாகவே கேட்டிருக்கிறார்.

2017 இல் மக்களின் நிலங்களை திரும்பவும் அவர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்த அரசு கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அமைதி வழியில் வெயிலிலும் குளிரிலும் இரவும் பகலுமாக மக்கள் போராடும் போது அவர்களின் காணிகள் விடுவிக்கப்படுவது உறுதிப்படுத்தப்படாமல் இழுத்தடிப்பது நேர்மையான நீதியான நடவடிக்கையல்ல.

இந்த நாட்டின் குடிமக்களில் ஒரு பகுதியினர் தமது சொந்த நிலத்தில் வாழ முடியாமல் அலைந்துகொண்டிருப்பது தேசிய அவமானமாகும். அவர்கள் சுயமரியாதை கண்ணியத்துடன் தமது சொந்த நிலங்களில் குடியேற ஏற்பாடுகளை செய்வது ஒரு ஜனநாயக அரசின் தார்மீக கடமையாகும்.

## கிழக்கு எழுக தமிழ் பிரித்தாளும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுக்கு விபரிப்பு

மக்கள் வாக்களித்த தலைவர்கள் மக்களுடைய பிரதிநிதிகள் என்று சொல்லக் கூடியவர்கள் அரசியல் மோசடி செய்து கொண்டிருக்கிற கால கட்டத்தில் தமிழ் மக்கள் நேரடியாக தங்களுடைய தலைவிதியை தீர்மானிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்

அந்த வகையில் எழுகதமிழ் மக்கள் வலுவை உருவாக்கி -சர்வதேச சமூகம் கூட தங்களுடைய எடுபிடிகளாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற கூட்டமைப்பினுடைய தலைவர், பேச்சாளர் போன்றவர்களுடைய கருத்தை முன்வைத்து நியாயப்படுத்த முடியாத அளவிற்கு- மக்கள் நேரடியாக அவர்களை தாண்டியும் செயற்பட வேண்டும் என்பது தான் இன்றைய காலகட்டத்தின் தேவை அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எழுக தமிழ் முக்கியமான ஆரம்பம் கிழக்கில் நடைபெற்றது அதன் வளர்ச்சி.

கிழக்கில் நடைபெற்ற எழுக தமிழுக்கு எல்லாவற்றையும் விட கூடுதலான ஒரு முக்கியத்துவம் இருக்கிறதென்றால் தமிழ் தேசத்தை தோற்கடிக்க விரும்புகிற தரப்புகள் வடக்கு கிழக்கு என்று பிரதேச வாதத்தை கிளப்பி எங்களை பிரித்தாளுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றன. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிற மாதிரித்தான் இந்த கிழக்கு எழுக தமிழ் நடைபெற்றது. தனிப்பட்ட முறையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு எழுக தமிழ் செயற்பாட்டில் கூடுதலான பங்கிருந்தது. மட்டக்களப்பு எழுக தமிழுக்கு கடந்த 2 மாதங்களாக எங்களுடைய செயலாளர் தலைமையில் -நான் ஒன்றரை மாதமாகவும்- ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்றோம் மட்டக்களப்பில் எந்த ஒரு இடத்திற்கும் போகாமல் இருக்கவில்லை.

( தொடர்ச்சி 3 ம் பக்கம் )

# உள்ளூராட்சி தேர்தல்

## பயனுள்ள வகையில் நடக்குமா?

மக்களின் அடிப்படை வசதிகளை பேணவும் மேம்படுத்தவுமே உள்ளூராட்சி சபைகள்

உள்ளூராட்சி தேர்தல் வருகிறது. உள்ளூர் திருடர்கள் மீண்டும் ஊரை அடித்து உலையில் போடத் தயாராகி விடுவார்கள்

மக்களே! உசார்! உசார்!!

2009 யுத்தத்திற்கு பிற்திய உள்ளூராட்சி சபைகளை அலங்கரித்தவர்கள் பலர் சந்தை குத்தகை, உள்ளூர் வீதி மற்றும் சுடுகாடு வரை என்ன செய்தார்கள் எள்பது ஊரறிந்த சங்கதி.

லஞ்ச லாவணியங்களைப்பற்றி கேட்கவே வேண்டாம்.

வடக்கு கிழக்கில் எமது நகரங்கள் நாறுகின்றன. டெங்கு நுளம்புகள் கட்டற்றுப் பெருகியுள்ளன.

தண்ணீர் மாசடைந்து விட்டது. குடிக்கத் தண்ணீர் இல்லை. அதைக் கேட்பார் யாருமில்லை. மாற்று ஏற்பாடுகளும் இல்லை.

கடந்த உள்ளூராட்சி காலகட்டத்தில் ஏன் காலம் காலமாக வறியவர்கள் பின் தங்க வைக்கப்பட்டவர்களின் சமூக நீதி பிரளயமே வந்து போனாலும் இன்று வரை மறுக்கப்பட்டே இருக்கிறது

இந்த மக்களின் வாழ்க்கை கரடு முரடானதாகவே இருக்கிறது


உள்ளூராட்சி சபைகளினூடாக இவர்களுக்கு கிடைக்க வேண்டிய சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் திட்டமிட்டு மறுக்கப்பட்டன.


மக்களே நீங்கள் திரும்பத் திரும்ப திருடர்களையும் பொய்யர்களையும் தெரிவு செய்வதால் உங்கள் தேவைகளை நிறைவேற்ற, சேவையைப் பெற அலைய வேண்டி -போராட வேண்டியிருக்கிறது. இந்த முரண் நிலை வேண்டாமே.

உங்களுக்கு சேவை செய்யக் கூடிய நன்மை தீமைகளில் நிற்கக் கூடிய நீங்கள் அறிந்த கண்ணியமான தெரிந்த மனிதர்களை உங்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யுங்கள்.

கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றும் பிரபலமான லேபல்களை நம்பி மீண்டும் மீண்டும் ஏமாறாதீர்கள்

# இதயபூர்வமான அஞ்சலி





தோழர். டாக்டர் குழைக்காதன் அவர்கள் 09.02.2017 அன்று திருநெல்வேலி மாவட்டத்தின் தென்திருப்பேரை எனும் அவரது சொந்த ஊரில் இயற்கை எய்தினார். இச்செய்தி எம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவருக்கு எம் இதய பூர்வமான அஞ்சலிகள்

ஈழத் தமிழர் போராட்டத்திற்கு, தம்மை முன்னிலைப்படுத்தாது அர்ப்பண உணர்வோடு செயற்பட்ட மனிதர்கள் அனேகர். இவர்களில் பெரும்பாலானோர் இடதுசாரிச் சிந்தனையாளர்கள், பெரியாரின் கருத்துக்களோடு வளர்ந்தவர்கள். இவர்களின் ஆதரவோடும் ஒத்துழைப்போடுமே ஈழத் தமிழர் போராட்டம் வலுப்பெற்றது. ஈழத் தமிழர் போராட்டத்திற்காக உழைத்தவர்களில் தோழர் குழைக்காதன் அவர்களுக்கு முக்கிய பங்குண்டு. அவர், தோழர் பத்மநாபா மீது அன்பும், உயர்ந்த மதிப்பும் கொண்டிருந்தார். 1990 இல் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்ற எம்மவர்களுக்கு மருத்துவ ரீதியிலும், நிர்வாக ரீதியான தேவைகளிலும் உதவியவர். இறுதி வரை எம்மை நேசித்த ஒருவர்.

மரணம் இயற்கையானது என்றாலும் தோழர் குழைக்காதன் இன் மரணம் வாழ்வை நேசிக்கும் எம்மைப் போன்றவர்கள் மனதை பிழிந்தே நிற்கின்றது அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் சகல உறவுகளுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

**தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி [S.D.P.T]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM
294 A, கஸ்தூரியார் வீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



# கையாலாகாத தமிழர் தலைமை

2015 ஜனவரி 8 இன் பின்னர் எமது அரசியல் தலைமைத் துவங்கள் மக்களுக்காக எத்தனையோ காரியங்களை செய்திருக்கலாம். சாதித்திருக்கலாம்.

பொதுவாகவே வடக்கு கிழக்கில் சமூகப் பாதுகாப்பென்பது இழிந்த நிலையிலேயே காணப்படுகிறது. பெண்களுக் கெதிரான வன்முறைகள் பொதுவான வாழ்வீச்சு வன் முறைகள் தீவிரமாக அதிகரித்து வருகின்றன.

30 வருட அரச வன்முறை மற்றும் இயக்க வன்முறைகளின் தொடர்ச்சியாகவும் நவதாராளவாத உலகின் உதாரித்தன மான நுகர்வுக் கலாசாரம், வேலையின்மை, சமூகத்தொடர் பற்ற கல்வி முறைமை

இளம் சந்ததியை உடல் உளரீதியாக வளப்படுத்தும் செயற்பாடுகள் பொதுவெளியில் காணப்படாமை

அரசியல் சமூகத் தலைமைகள் என்று சொல்லப் படுவனவற்றின் பொறுப்பற்ற சமூக அலட்சியம்

சினிமா மற்றும் கலாச்சாரத்துறைகளில் நிலவும் மிதமிஞ்சிய வன்முறை, போதைப்பொருள் புளக்கம் என்பன உளச் சிதைவு நிலையை ஏற்படுத்தியுள்ளன.

நாளாந்தம் நிகழும் வன்முறை மற்றும் வீதி விபத்துக்களில் நிகழும் அநியாய மரணங்கள் பற்றிய பிரக்ஞை அரசியல் தலைமைத்துவ மட்டதில் மிகவும் கீழ்மட்டத்திலேயே காணப்படுகிறது

30 ஆண்டுகளுக்கு மேலாக தமது காணிகள் அபகரிக்கப் பட்டிருக்கின்றன என்று கேப்பாபுலவு கிராம மக்கள் பனியிலும் குளிரிலிலும் போராடினர்கள்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு கேட்கிறார்கள்.

வடக்கு வலிகாமம் மக்களை இன்னும் முழுமையாக பாதுகாப்பாக குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் படவில்லை

மக்களின் பாரம்பரிய உரித்தான கடல் நில வளங்களை பாவிப்பதற்கான அடிப்படையான உரிமை இன்றளவில் பூர்த்தி செய்யப்படவில்லை.

திருமலை பிரதேசம் யுனெஸ்கோவால் பிரகடனப்படுத் தப்பட்ட நகரமாக இருந்தாலும் மர்மமும் பதட்டமும் இராணுவ மயமாக்கப்பட்ட சூழலில் தளர்வு ஏற்படாத பிரதேசமாகவே காணப்படுகிறது. இது சுதந்திரமான சிவிலியன் பிரதேசமாக வேண்டும்

யாழ் குடாநாட்டின் தீவுப் பகுதியை கேட்கவே வேண்டாம் மக்கள் இங்கு நம்பிக்கையுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகள் இல்லலை. மனித வாழ்வு இங்கு நாளாந்தம் தனிமைப்பட்டுக் கொண்டிருக்கிறது வித்தியா-கம்சியா வரையிலான படுகொலைகள் வாழ்க்கை ஒளி தீவில் ஏற்றப்பட வேண்டும்

இராணுவ பிரசன்னத்தை குறைக்குமாறு முறையான சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுமாறு மக்கள் கோருகிறார்கள்

வீடற்ற ஆயிரக்கணக்கான மக்கள் பொருத்து வீடு கூடா தென்றால் சூழலுக்கு தகுந்த மாற்று வீடு தருவார்களா? என்று கேட்கிறார்கள்.

ஆனால் நிலமும் நிச்சயமில்லை. வீடும் நிச்சயமில்லலை

பாதுகாப்பான வீதிப் போக்குவரத்தில்லை நாளாந்த வன்முறை, சூழ்ந்து வரும் வரட்சி. பட்டினி பாலியல் ரீதியான அச்சுறுத்தல்கள்

பாராளுமன்றம் மாகாண சபைகளில் இருக்கும் தமிழ் பிரதிநிதித்துவம் வேறு எதைச்செய்ய முடியாவிட்டாலும் செய்யக் கூடிய காரியங்கள் ஆயிரம் இருக்கின்றன. அவற்றை விட்டு விட்டு போதையூட்டும் வெற்றுக் கோசங் களில் காலம் தள்ளுகிறார்கள்

மக்கள் இந்த ஊசிப்போன மோசடித் தலைமைத்துவத்திற்கு மாற்றான ஆக்கபூர்வமான தலைமைத்துவத்தைப்பற்றி சிந்திக்க வேண்டிய வரலாற்றுத்தருணம் இது.

வரும் உள்ளுராட்சி தேர்தலில் கட்சி அரசியலுக்கப்பால் மக்கள் சிந்திக்கவேண்டும்

"இதனை இவன் முடிப்பான் என்றெண்ணி அதனை அவன் கண்விடல்"

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
## Social Democratic Party of Tamils (S.D.P.T)

## அரசியற் திட்டம்

2016 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற
கட்சிக் காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டது.

( தொடராக பிரசுரிக்கப்பட்டு வரும் கட்சி அரசியற் திட்டத்தின் 4 ஆம் பாகம் )

### 8. சாதி முரண்பாடு தொடர்பாக :-

இலங்கை வாழ் தமிழ்த் தேசிய இனத்தில் உள்ளாக அமைந்துள்ள மக்கட் பிரிவினரிடையே வெவ்வேறு அரசியல் பொருளாதார நிலைகளும், சமூகரீதியான அடையாளங்களும் காணப்படு கின்றன. இதனால் இங்கே இன்னமும் தாழ்த்தப்பட்டப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள் எனும் அநாகரீகமான சமூக வழக்கங்கள் நிலவுகின்றன. இந்தத் தீண்டாமை, பாரபட்சம், புறக்கணிப்புத் தான் இன்றுவரை பிரதானமாக தமிழ்ச் சமூகத்தை அரித்தழித்து வருகிறது. இது பல்வேறு வடிவங்களில் பல்வேறு அரங்குகளுக்கு வியாபித்திருக்கிறது, மேலைத்தேய நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து சென்றிருக்கிறது.

இங்கு தீண்டாமை மெருகூட்டப்பட்ட வடிவத்தை எடுத்திருக்கிற போதிலும் நிலம், கல்வி, தொழில் விடயங்களில் தீண்டாமைக் கொடுமைக்குள்ளான மக்கள் காலங்காலமாக எதிர்நோக்கிய சவால்களை இன்னமும் வெவ்வேறு தளங்களிலும், வெவ்வேறு அளவுகளிலும் மற்றும் வடிவங் களிலும் சந்தித்துக் கொண்டே இருக்கிறார்கள். இங்கு சாதிப் பிரச்சினைகள் முடிந்து போனவை போல பாசாங்கு செய்பவையாகவே இந்த மண்ணின் சமூக மேற்கட்டமைப்பு நிறுவனங்கள் உள்ளன.

இதனை மாற்றி அமைக்க சாதிரீதியாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மத்திய, மாகாண மற்றும் உள்ளுர் அரசாட்சி அமைப்புகளில் அரசியற் பிரதிநிதித்துவம் உரிய அளவுக்கு வழங்கப்பட வேண்டும், அரச நிர்வாக அமைப்புக்களில் உரிய பங்கு வழங்கப்பட வேண்டும், சமூக பொருளாதார உள்ளக கட்டமைப்பு வசதிகள் சென்றடைவதில் சாதி அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பாரதூர மான பாரபட்சங்கள், அநீதிகள் உடனடியாக களையப்பட வேண்டும். இங்கு சாதி அடிப்படையிலான வேறுபாடுகளின்றி ஒவ்வொருவரும் கண்ணியமான மனிதர்களாக, கௌரவமான முறையில் நடத்தப்பட வேண்டும். சாதி முறை இங்கு சட்டவிரோதமாக்கப்பட வேண்டும்.

மக்களிடையே உண்மையான சமநீதி கொண்ட சமத்துவத்தை நிலைநாட்டும் வகையில் இங்கு முற்போக்கானதொரு சமூகக் கட்டமைப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் தமிழர் தேசிய இனம் முன்னேற்றங்களை நோக்கி வளர்வதும், தமிழர்கள் அனைவரும் நிரந்தர மாக சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் என்பவற்றை அனுபவிப்பது வும் சாத்தியமாகும். தனக்குள்ளே சமநீதியைக் காப்பாற்றாத ஒரு சமூகம் மற்றொரு சமூகத்திட மிருந்து நீதியைக் கோருவதற்கான தார்மீகத் தகுதியை இழந்துவிடும் என்பது இங்கு உணரப்பட வேண்டும்.

### 9. மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாக :-

- மலையகத் தமிழ் மக்களின் அரசியற் சக்திகளில் ஒரு பகுதியினர் தங்களை இந்திய வம்சாவழித் தமிழர்கள் என வகைப்படுத்த முயல்கின்றனர். இன்னொரு பகுதியினர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், மலையக மக்களின் அரசியல் பொருளாதார சமூக நலன்கள் பாதுகாக்கப்படவும், தங்களது தனித்துவம் அங்கீகரிக்கப்படவும், தாங்கள் சுயாதீன வளர்ச்சிகள் பெற்று முன்னேறவும் தனித்துவமான தேசிய அடையாளம் அவசியம் எனக் கருதுகிறார்கள். எவ்வாறாயினும் மலையகத் தமிழர்கள் இன்று இலங்கையில் தனித்துவமான பண்புகளும் அடையாளங்களும் கொண்ட ஒரு தேசிய இனம்.

- கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைமைகளோடு ஒப்பிடுகிற போது அரசியல் பொருளாதார வாழ்க்கையில் பல முன்னேற் றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் லயன் வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏதுமில்லை. இந்தத் தொழிலா ளர்கள் அமைப்பு ரீதியான ஒரு தொழிற்துறையின் ஊழியர்களாக இருந்த போதிலும் இலங்கையில் ஆகக் குறைந்த சம்பளம் பெறுபவர்களாகவே உள்ளனர். இவர்கள் தங்களது குறைந்தபட்ச சம்பள உயர்வுக்காக ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து கடுமையாகப் போராட வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

- மலையக தமிழ் மக்கள் குறைந்தபட்சமாயினும் கௌரவமான சமூகப் பிரஜைகளாக வாழும் நிலை ஏற்படுவதற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கையின் தேசிய தராதரத் திலான அடிப்படைச் சம்பளம் கொண்ட வகையில் நிரந்தர மாதாந்தச் சம்பளம் கோரியும், சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு ஆதாரமான அடிப்படைக் கட்டமைப்புக்களைக் கோரியும் தொடர்ந்து போராடி வருகிறார்கள். தோட்டத் தொழிலாளர்களாக உள்ள பெருந்தொகையானோரின் அடுத்த தலைமுறைகளும் தோட்டத் தொழிலாளர்களாகவே வாழ வேண்டிய நிலைமையே உள்ளது. மலையகத்தின் சூழலுக்கேற்ற வேறு தொழிற்துறைகள் விருத்தி செய்யப்படவில்லை. கல்வி மற்றும் மருத்துவ சேவைக்கான கட்டமைப்புகள் இன்னமும் பின்தங்கியவையாகவே உள்ளன. மலையகத் தமிழ் மக்களுக்கு அரச துறைகளில் மிகக் குறைந்த அளவான வேலைவாய்ப்புகளே வழங்கப்படுகின்றன.

- இலங்கையில் இப்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரத் தேர்தல் முறையானது பல்வேறு குறைபாடுகளைக் கொண்டதாயினும் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ விடயத் தில் இங்கு குறைந்தபட்ச நியாயத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. எனவே, புதிய அரசியல் யாப்பின் மூலம் எதிர்கொள்ளவுள்ள தேர்தல் முறையானது மலையகத் தமிழ் மக்கள் தற்போது கொண்டிருக்கும் நியாயமான நிலையினைப் பறித்து விடுமோ என்ற அச்சம் பரவலாக உள்ளது.

- மலையகத் தமிழ் மக்கள் இந்த நாட்டில் கௌரவமான சமூகப் பிரஜைகளாக வாழவும், நாட்டின் பொருளாதார முன்னேற்றங்களில் அவர்களுக்கு உரிய பங்கு வழங்கப்படவும், அவர்களின் தனித்துவம், சமூக பொருளாதார முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் அவர்களுக்குரிய சுயாட்சி அமைப்புகள் வழங்கப்படவும் வேண்டிய ஏற்பாடுகள் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரிகாவின் காலம், ராஜபக்ஸாவின் காலம் போலவே மைத்திரி - ரணில் கூட்டாட்சியின் காலமும்

# கானல் நீராகும் புதிய அரசியல் யாப்பு

**சர்வோதயன்**

## எல்லாரும் சொன்னார்கள் எவரும் செய்யவில்லை

அளவுக்கதிகமான நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி ஆட்சி அமைப்பு முறையே இலங்கையில் சமூக பொருளாதார அழிவுகளுக்கு பெரும் காரணமாக இருந்தது என்பதை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக அனைத்து இனங்களையும் சார்ந்த இலங்கையின் அரசியல் தலைவர்கள் ஒப்புக்கொண்டு வந்துள்ளனர்.

1994 ஆம் ஆண்டு அதைச் சொல்லித்தான் சந்திரிகா பண்டாரநாயக்கா ஆட்சியைப் பிடித்தார். பத்து ஆண்டுகள் ஆட்சியிலிருந்த போதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறையை அவரால் மாற்றவில்லை. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவி ஏற்பதற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஸாவும் அதனையே கூறினார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வதற்கு அவர் எந்த முயற்சியையும் மேற்கொள்ளாதது மட்டுமல்ல, மாறாக, ஜனாதிபதியின் அதிகாரங்களை ஒரு சர்வாதிகாரி ஆட்சி நிலைக்கு கொண்டு செல்லும் வேலைகளையே அவர் மேற்கொண்டார். ராஜபக்ஸாக்களின் எதேச்சாதிகார ஆட்சியை மாற்றி ஜனநாயகத்தை நிலைநாட்டுவதென முழுக்கமிட்டு செயற்பட்ட அனைவரும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை முற்றாக ஒழிக்கப்படுவதையே கோசமாகக் கொண்டிருந்தனர்.

## மைத்திரி - ரணில் வாக்குறுதிகளை மலைபோல் நம்பிய மக்கள்

2015 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனா அவர்களும் அவரின் வெற்றிக்கு முழு மூச்சாக நின்ற ஐ.தே.கட்சியினரும் மற்றும் சந்திரிகா போன்றோரும் புதிய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை முற்று முழுதாக இல்லாது ஒழிக்கப்பட்டு பிரித்தானியா மற்றும் இந்தியாவில் உள்ளது போன்ற அரசாங்க முறைமை நிலைநாட்டப்படும் என நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்தனர். 2015 ஜனவரி 08 ஆம் திகதி ஜனாதிபதிக்கான தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனா அவர்கள் தான் ஐந்து ஆண்டுகள் மட்டுமே ஜனாதிபதியாக இருக்கப் போவதாகவும், மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனவும், தனது இந்த ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் முடிவடைவதற்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களின் போதும் ஜனாதிபதியாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் அந்த வாக்குறுதி தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டது. பாராளுமன்றத்தை புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கான அரசியல் யாப்புக்கான சபையாக மாற்றுகின்ற பொழுது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பிரதானமாக மூன்று விடயங்களுக்கு புதிய அரசியல் யாப்பு தீர்வு வழங்கும் என்றார். அதாவது

1. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல்,
2. போதிய அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குதல்,
3. விகிதாசார தேர்தல் முறைக்கு மாற்றாக சீர்திருத்தத்தை கொண்டு வருதல்

என்பவையே அவையாகும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணியும் கங்கனம் கட்டிச் செயற்பட்டது. இலங்கையின் சமூக சேவை நிறுவனங்கள் பெரும்பாலும் அந்த நோக்கத்துடனேயே மைத்திரி - ரணில் கூட்டாட்சி அமைவதற்குத் துணை நின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் மகிந்த ராஜபக்ஸா அவர்களும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாது ஒழிப்பதற்கு தானும் ஒத்துழைப்பார் என்றே கருத்துக்களை வெளியிட்டார்.

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சிறுபான்மையினருக்கு வேண்டுமாம்

இலங்கையின் சிறுபான்மையான தேசிய இன மக்கள் மகிந்த ராஜபக்ஸாவைத் தோற்கடித்து மைத்திரி-ரணில் கூட்டாட்சியை நிலைநிறுத்துவதற்கு முழுமையான பங்களிப்பை வழங்கினார்கள். எனினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்கின்ற விடயத்தில் சிறுபான்மை தேசிய இனங்களின் அரசியல் கட்சித் தலைவர்களிடையே ஒருமித்த கருத்து உள்ளது என்று கூறமுடியாது.

நாட்டின் ஜனாதிபதியானவர் நாட்டின் அனைத்து மக்களினாலும் தேர்ந்து எடுக்கப்படுகின்றபோது அவருக்கு கணிசமான அதிகாரங்கள் வரையறுக்கப்பட்ட அளவிலும் இருக்க வேண்டும் என்பது அர்த்தமுடைய கருத்தாகும். மக்களால் தேர்ந்து எடுக்கப்படும் ஜனாதிபதி கணிசமான அளவுக்காயினும் நிறைவேற்றதிகாரம் கெண்டவராக இருக்கின்ற பொழுதுதான் இலங்கையில் உள்ள சிறுபான்மை தேசிய இனங்களுக்கும் நாட்டின் பொதுவான விவகாரங்களில் பங்கு இருக்கும் என நம்பப்படுகிறது.

19வது அரசியல் யாப்பு திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டன. வழங்கப்பட்ட அதிகாரங்களும் வரையறைக்கு உள்ளாக்கப்பட்டன. சிறுபான்மை தேசிய இனங்களின் பிரதிநிதிகள் 19வது அரசியல் யாப்பு திருத்தத்திற்கு தமது ஒற்றுமையான ஆதரவை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை முற்றாக இல்லாது செய்வதில் சிறுபான்மை தேசிய இனங்களின் கட்சிகளுக்கிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன.

## மஹிந்தவின் பல்டி சுதந்திரக் கட்சியில் குழப்பம்

அண்மைக்காலமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாது செய்வதற்கு எதிரான கருத்துகள் தலைதூக்கியுள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபட்ட நிலையில் இருக்கும் இன்றைய காலகட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது எதிர்வரக்கூடிய தேர்தல்களில் ஐக்கிய தேசியக்கட்சி தனித்து வெற்றிகளைப் பெறுவதற்கு அதிகமான வாய்ப்புகளை வழங்கிவிடும் என்பதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் புரிதலாகும். இதனாலேயே ஜனாதிபதி தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருக்க வேண்டும் என்கின்றனர்.

பாராளுமன்றத்தில் எதிர் வரிசையில் உள்ள மஹிந்த ராஜபக்ஸா அவர்கள் புதிய அரசாங்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதிலிருந்து பின் வாங்கி வருவதாக மக்கள் மத்தியில் குற்றம் சாட்டுகிறார். ஆனால், அவரின் அணியில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் அது தொடர்பாக மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டு வருகிறார்கள்.

இலங்கையின் இறைமையையும் ஒற்றுமையையும் தேசிய பாதுகாப்பையும் ஒரு முகமாக கட்டிக்காப்பதற்கு ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்கள் உடையவராக இருக்க வேண்டும் என கூட்டு அரசாங்கத்தில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் பலரும் பகிரங்கமாக வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலைமை புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதில் ஒரு பெரும் முட்டுக்கட்டையை ஏற்படுத்தி உள்ளது.

## தடைகள் பின்னடைவுகள் தகரும் நம்பிக்கைகள்

கூட்டாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டு செயற்படத் தொடங்கிய போது ஆஹா! இந்தா! புதிய அரசியல் யாப்பு வந்து விட்டது என்பது போல தோற்றங்கள் காட்டப்பட்டன. புதிய பாராளுமன்றம் கூட்டப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் நிறைவடையப் போகும் நிலையிலும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் தேர்தல் முறை சீர்திருத்தம், மாகாணசபைகளுக்கான ஆதிகாரப்பகிர்வு ஆகிய எந்த விடயத்திலும் ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்காயினும் கட்சிகளுக்கிடையே உடன்பாடு ஏற்படவில்லை. மாறாக, தடைகளும் பின்னடைவுகளுமே தலை தூக்கி நிற்கின்றன.

ஜனாதிபதி சிறிசேனாவே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற கோசம் சுதந்திரக் கட்சிக்குள் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. மேற்கூறியவற்றால் சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையே கருத்து வேறுபாடு அதிகரித்து வருகிறது. சிறுபான்மை தேசிய இனங்களின் கட்சிகள் நம்பிக்கை இழந்து வருகின்றன. சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு ஜனநாயக சத்திகள் தமது விரத்தியை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறு ஓர் அரசியல் புயல் தென்னிலங்கையில் வீசிக்கொண்டு இருக்கிறபோது இவை தொடர்பாக ஜனாதிபதி சிறிசேனா இன்னமும் தமது கருத்தை - நிலைப்பாட்டை வெளியிடாமல் இருப்பது ஓர் நம்பிக்கை கீற்றை இன்னமும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது என ஒரு பகுதியினரும், ஜனாதிபதியின் மௌனம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களின் குழப்பங்களுக்கு சம்மதம் தெரிவிப்பதாக உள்ளதென இன்னொரு பகுதியினரும் கருதுகின்றனர். சந்திரிகாவின் காலம், ராஜபக்ஸாவின் காலம் போலவே மைத்திரி - ரணில் கூட்டாட்சியின் காலமும் நாட்டு மக்களின் நம்பிக்கையான எதிர்பார்ப்புகளை கானல் நீராக்கி விடுமோ என்ற சந்தேகங்களே இன்று வலியனவாக உள்ளன.

---

## கிழக்கு எழுக தமிழ் .. (1 ம் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஒரு கட்டத்திலும் நாங்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் அல்லது வடக்கை சேர்ந்தவர்கள் என்று எந்த ஒரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை. மாறாக, முழுமையாக இந்த போராட்டத்தின் நியாயத்தன்மையை ஏற்றுக்கொண்டு தேசியத் தலைமையின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொண்டு இன்றைக் கிருக்கிற வெற்றிடம் குறித்து சரியாக கவலை தெரிவிக்கிற வகையில் தான் அந்த மக்கள் நடந்துகொண்டனர். நாங்கள் அந்நியர்கள், வித்தியாசமானவர்கள் எனறு எந்த ஒரு இடத்திலும் பார்க்கப்படவில்லை. அதுமட்டுமல்ல பிரதேசவாதம் என்ற கோணத்தில் பிரித்தாள விரும்பின தரப்புக்கு இது முற்றுப்புள்ளி.

அது மட்டுமில்லை இன்றைக்கு முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் பிரித்தாளுவதற்கு அரசு கடுமையாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது எங்களுக்குத் தெரியும் அரசினுடைய ஒரு சில கூலிகள், தமிழ கூலிகளும் அந்த பிரதேசவாதத்தை கட்டியெழுப்பி தமிழ் முஸ்லிம் உறவை கட்டியெழுப்பாமல் நிரந்தரமாக பிரிப்பதற்கும் வேலை செய்கிறார்கள், தூண்டி விடுகிறார்கள். அப்படிப்பட்ட அரசின் கூலிகளும் இருக்கின்ற ஒரு சூழலில் எழுக தமிழ் நிகழ்விற்காக கடை கடையாக சென்று நாங்கள் எங்களுடைய பிரசுரங்களைக் கொடுத்த எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு முஸ்லிம் நபரும் இந்த எழுக தமிழுக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கவில்லை. முஸ்லிம் மக்கள் -தலைவர்களை விடுங்கோ- மக்கள் இடைஞ்சலாக எந்த இடத்திலும் செயற்படவில்லை. கருத்துகள் இருக்கலாம் முக்கியமான விடயம் என்னவென்றால் குழப்பும் நோக்கத்தோடு செயற்படவில்லை. செயற்பட்ட தரப்புக்கள் துரதிஸ்டவசமாக தமிழரசு கட்சியில் இருக்கக் கூடிய ஒரு சில நபர்கள் தான். மற்றது எங்களுக்கு தெரிந்த கடும் எதிரியாக இருக்கக் கூடிய ஸ்ரீலங்கா அரசினுடைய கட்டமைப்புக்கள் தான் செயற்பட்டன.

வடக்கு கிழக்கு பிரதேச வாதம் என்று சொல்லியும் கிழக்கு மக்கள் முழுமையாக ஆதரித்தார்கள் தமிழ் முஸ்லிம் உறவு இல்லை என்று சொல்லி இருந்தும் கூட முஸ்லிம் மக்கள் எதிராக செயற்படவில்லை. ஆகவே, அந்தவகையில் நான் நினைக்கிறேன் தமிழ் மக்கள் பேரவையினுடைய இந்த எழுக தமிழ் நிகழ்வு தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசை களை தெளிவு படுத்தும் வகையில் ஒரு விழிப்புணர்வு தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமில்லை முஸ்லிம் மக்கள் மட்டத்திலும் கொண்டு சென்றிருக்கிறது. மேலதிகமாக முஸ்லிம் மக்களு டனான உறவை கட்டியெழுப்புவது மட்டுமில்லை உறுதிப் படுத்துவதற்கும் நாங்கள் தொடர்ந்தும் பாடுபட வேண்டும் என்பது எங்கள் கருத்தாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருப்பிடத்திற்காக ஏங்குவோர்க்கு பொருத்து வீடுகள் பொருத்தமாகாதா?

- வசந்தநாதன் -

"வீட்டைக் கட்டிப்பார் கல்யாணத்தை பண்ணிப்பார்" இரண்டுமே பெருமளவு பொருட் செலவும், கஷ்டங்களும் நிறைந்தவை என்பதையே இச் சொற்தொடர் எடுத்தியம்புகிறது. எமது நாட்டில் பெருமளவு மக்களுக்கு வீடு என்பது வெறும் கனவாகவே இருந்து வருகிறது. யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படுகின்ற புனர்வாழ்வுத் திட்டங்களே வடக்கு கிழக்கில் வாழும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பெருமளவு மக்களின் சொந்த வீடு என்ற கனவை நனவாக்கியிருக்கிறது.

### மக்களின் எதிர்பார்ப்பும் மக்கள் பிரதிநிதிகளின் கையாலாகாதனமும்

தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளே இப்போது இதற்கும் முட்டுக்கட்டை போட்டுள்ளார்கள். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாவதற்கும், மைத்திரி - ரணில் கூட்டர சாங்கம் பதவிக்கு வருவதற்கும் பெரும் பங்கு வகித்தவர்கள் நாங்கள் என்று கூறிக்கொள்ளும் இப் பிரதிநிதிகள் பொருத்து வீடு பொருத்தமற்றது எனும் நிராகரிப்பு அரசியலை மட்டுமே செய்கின்றனர். பல வருடங்களாக தமக்கு வீட்டு திட்டம் ஒன்று கிடைக்காதா என எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கு பொருத்தமான வீடுகள் கிடைக்கும் வகையாக அரசாங்கத்துடன் பேசி ஏற்பாடுகள் செய்வதில் அவர்கள் ஆக்கபூர்வமாக செயற்படுவதாகத் தெரியவில்லை.

பொருத்து வீடு எமது மக்களுக்குப் பொருந்தாது என ஒரு தரப்பும் பொருத்து வீட்டு திட்டத்தைபெற பொதுமக்கள் ஆர்வமாயுள்ளார்கள் என உறுதிப்படுத்த மற்றொரு தரப்பும் முனைந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் வீட்டுத் திட்டத்தை எதிர்பார்த்திருந்த மக்கள் குழப்பத்துக்குள் அலைபாய விடப்பட்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டே அரசின் நகர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி தந்திர அரசியல் நடத்தும் இவர்கள், பொதுமக்களை மட்டும் - அவர்களின் அடிப்படை தேவைகள் குறித்த விவகாரத்தில் - அரசின் பொருத்து வீட்டு திட்டத்தை எதிர்த்து நிற்க நிர்ப்பந்திக் கிறார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் இது "பொருத்து வீடல்ல பொருத்து கூடு" என தெரிவித்துள்ளார். மாளிகை அளவு வீடு கொண்ட மேட்டுக்குடி தலைவர்களுக்கு அவர்களது வசிப்பிடங்களுடன் ஒப்பிடும் போது இந்த பொருத்து வீடுகள் கூடாகத் தெரியலாம். ஆனால், சிறு ஓலைக் குடிசைகளிலும், கறள் பிடித்த தகரங்களால் அமைத்துக் கொண்ட தற்காலிக வாழிடங்களிலும், பொலித்தீன் சீலைகளின் நிழலிலும் அத்தியாவசிய வீட்டு பாவனைப் பொருட்களை வாங்கும் வல்லமையின்றி வாழ்க்கையை கொண்டு செலுத்தும் அடிமட்ட மக்களுக்கு வீட்டுக்கு தேவையான பொருட்கள் மற்றும் அத்தியாவசிய வசதிகள் அடங்கிய 21 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த பொருத்துவீடு ஒரு மாளிகைக்கு சமமாகும்.

### கமிஷன், அரசியல் ஆதாயம் பொருத்து வீட்டு திட்டத்தில் மட்டும்தானா?

பொருத்து வீட்டு திட்டத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு கமிஷன், தனிப்பட்ட ஆதாயங்களிருப்பதாலேயே அவர் இந்த பொருத்து வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் காட்டுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், இந்த வீட்டு திட்டத்தை கடுமையாக எதிர்க்கும் தமிழ் தேசிய கூட்டமைப் பின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மீதும் - மருதனாமடம் சந்தை, பளை காற்றாலை, சுண்ணாகம் குடிநீரில் ஓயில் கலந்தமை, வைத்திய சாலைகள் மற்றும் பாடசாலைகளின் கட்டிட ஒப்பந்தங்கள், போக்குவரத்து சபை -தனியார் போக்குவரத்து சேவை இடையிலான பிணக்கு, உள்ளூராட்சி சபைகள் மேற் கொண்ட வீதிகள் புனரமைப்பு ஒப்பந்தங்கள், சந்தைகளில் கடைகள் குத்தகைக்கு வழங்குதல் என பல்வேறு விவகாரங்களில் இதேபோன்று கமிஷன் பெறப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமே உள்ளன. அதற்காக இந்த வேலைத் திட்டங்கள் தடைப்படவுமில்லை, குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவும் இல்லை. தமது வேலைத் திட்டங்களை அவர்கள் தொடரத் தான் செய்கிறார்கள் - அவற்றால் நன்மை பெறுவோரெல்லாம் தொடர்ந்து நன்மையடைந்து கொண்டுதான் இருக்கிறார்கள். சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தமக்கு வரிச் சலுகையுடன் வழங்கப்படும் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை கொடுத்து மில்லியன் கணக்கில் கமிஷன் பெறுவது ஒன்றும் இரகசியமான விடயமல்லவே!

### கண்டுகொள்ளப்படாத மோசடிகள், குறைபாடுகள், சூழல் பொருத்தப்பாடுகள்

பொருத்து வீட்டுத் திட்டத்தை எதிர்க்கின்ற இந்த தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பல கட்டங்களாக இடம்பெற்ற கல் வீட்டுத் திட்டங்களின் போது இடம் பெறுகின்ற ஊழல்கள் மோசடிகள் தொடர்பாகவோ, அந்த வீட்டு திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்தோ வீடுகளில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள், சூழல் பொருத்தப்பாடுகள் பற்றியோ என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள் உலகில் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதோடு அதன் கீழ் வாழ்பவர்களுக்கு தீராத நோய்களையும் ஏற்படுத்தக் கூடியவை என வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் மேலும் உலகில் பல நாடுகளிலும் அவற்றின் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் யுத்தத்துக்கு பின்னர் அமைக்கப்பட்ட பெருந்தொகையான வீடுகள் அஸ்பெஸ்டஸ் கொண்டவையாகத் தான் அமைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பாக இன்னமும் இந்த தமிழ்ப் பிரதிநிதிகள் ஒரு மூச்சு கூட விடவில்லையே. தொடர்ந்தும் அது எமது மக்கள் மத்தியில் வீடமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வீடுகளை கட்டி முடிப்பதற்கு மண் இல்லை, மரம் இல்லை, கல் தோண்ட கடும் கட்டுப்பாடுகள். இவை கள்ளச் சந்தையிலேயே தாராளமாகக் கிடைக்கின்றன. இவற்றை கள்ளச் சந்தையில் இரு மடங்கு விலை கொடுத்து வாங்கி, அதற்காக தமது பணத்தில் பெரும்பகுதியை இழந்தும் கூட உரிய நேரத்துக்கு வீட்டை கட்டி முடிக்க முடியாமல் கடன்பட்டு திண்டாடும் சாதாரண மக்களின் இன்னல்களை தீர்ப்பதற்கு இந்தத் தமிழ்ப் பிரதிநிதிகளால் ஏதாயினும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகளை தெரிவு செய்வதில் காணப்படும் குறைபாடுகள், பாகுபாடுகள் மற்றும் மோசடிகளைக் களைவதற்குத் தானும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆட்சியாளர்களாகவும் மத்திய அரசில் பங்காளர்களாகவும் இருக்கும் இந்தத் தமிழ்ப் பிரதிநிதிகள் இதுவரை ஏதாயினும் நடவடிக்கை மேற்கொண்டார்களா?

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததாம்" என்பது போன்ற ஒரு நிலைக்கே இந்த தமிழ்ப் பிரதிநிதிகள் உள்ளாக்கியிருக்கிறார்கள். எதையும் கண்டுகொள்ளாமல் இருந்தவர்கள் இப்போது "கைக்கு கிட்டியதை வீடற்றவர்களின் வாய்க்கு எட்ட விடாமல்" செய்வது போல பொருத்து வீட்டு திட்டத்தை எதிர்த்துக் கிளம்பியிருப்பது வீட்டுத் திட்டத்தை எதிர்பார்த்துக் காத் திருக்கும் மக்களுக்குக் குழப்பத்தையும் கேள்விகளையுமே தோற்றுவித்துள்ளன.

### பொருத்து வீட்டை நிலத்தடி நீருடன் பொருத்தும் முதலமைச்சர்

இப்போது வடக்கின் முதலமைச்சர் பொருத்து வீடு நிலத்தடி நீருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கை செய்துள்ளார்.

குழாய்க்கிணறுகள் நிலத்தடி நீர் வளத்துக்கு ஆபத்தானது என்பது பொது உண்மையாகும். பொருத்து வீடுகளைப் பெறுபவர்கள் மட்டுமல்ல எவர் குழாய்க் கிணறுகளை அமைத்தாலும் அது எமது நீர் வளத்துக்கு ஆபத்தே.

ஆனால் இங்கு புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட – வழங்கப்பட்ட பல வீடுகளில் செலவு சுருக்கம் என்பதால் குழாய்க் கிணறுகளே அமைக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான விவசாய கிணறுகளில் இங்கு ஆழ் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவை எதனையும் இதுவரை இந்த முதலமைச்சரோ, தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களோ கண்டு கொள்ளவில்லை. குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுவதை தடுப்பதற்கு மாகாண சபை எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. மக்களுக்கு இதனால் ஏற்படப்போகும் ஆபத்தை புரியவைத்து குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டாம் என தயவாகக் கூட கேட்டதில்லை. மக்களுக்கு அன்றாடப் பாவனைகளுக்கான நீர்த் தேவைகளுக்கு மாற்றுத் திட்டம் எதுவும் இவர்களிடம் இல்லை.

வீடமைப்பு திட்ட பயனாளியாவதற்கு சொந்த காணி முன்நிபந்தனையாக இருப்பதனால் பொருளாதார வசதி குறைந்தவர்கள் ஒரு பரப்பு அல்லது இரண்டு பரப்பு நிலத்தையே கொள்வனவு செய்து வீடமைப்பு திட்டத்தை பெறுபவர்கள் இடநெருக்கடி காரணமாகவும் குழாய் கிணறுகளையே அமைத்து வருகிறார்கள்.

இதுகாலவரை இது பற்றி அக்கறைகாட்டாமல் இப்போது பொருத்து வீடுகளுக்கு அமைக்கப்படவிருக்கும் குழாய் கிணறுகள் நிலத்தடி நீருக்கு ஆபத்தை உண்டுபண்ணிவிடும் என பொருத்து வீடுகளுக்கு எதிரான பிரசாரத்தில் வடக்கு முதலமைச்சரும் இறங்கியுள்ளார்.

குழாய் கிணறுகள் நிலத்தடி நீருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இதுவரை குழாய் கிணறுகள் அமைக்கப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு அல்லது ஒழுங்கு படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல இடங்களில் வீடுகளில் உள்ள கிணறுகளின் உள்ளேயே குழாய் கிணறுகள் அடிக்கப்பட்டு வருகின்றன.

தொகுதி, தொகுதியாக தனி வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதை தொழிலாக மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்கள் தாம் நிர்மாணிக்கும் வீடுகளில் தனித் தனியே குழாய் கிணறுகள் அமைத்துத் தரப்படும் என விளம்பரம் செய்து வருவதை இப்போதும் காணலாம்.

எனவே பொருத்து வீடுகள் தான் நிலத்தடி நீருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பது பூச்சாண்டி. கள் அருந்துவதை தடுப்பதற்காக வடலியை வெட்ட வேண்டுமா?

### மூலப்பொருட்களுக்கு திண்டாட்டம் புதிய வரவுகளுக்கு எதிர்ப்பு

எமது பிரதேசத்தில் பாரம்பரிய முறைப்படி வீடுகளை கட்டுவதற்கு தேவையான மண்ணுக்கும், மரத்துக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுவதுடன் அவற்றைப் பெறுவதில் லஞ்சமும், ஊழலும் கள்ளச் சந்தை மோசடிகளுமே பெருகிவருகிறது. மக்கள் நியாயமான விலையில், உரிய நேரத்துக்கு தேவையான அளவுக்கு மணல், கல் மற்றும் மரங்களைப் பெறுவதற்கு முடியாமல் திண்டாடுகின்றனர். இந்த முதலமைச்சரின் கீழ் செயற்படும் அமைச்சரவையோ, தமிழர் அரசின் பிரதிநிதிகளோ இதுவரை ஏதாவது முயற்சித்திருக்கிறார்களா? மாறாக, இந்த பொருட்களுக்கான கள்ளச் சந்தையில் தாமும் பங்காளர்களாக ஆகுவதிலேயே அக்கறையாக உள்ளனர்.

சீமெந்து உற்பத்தியும் முற்றாகக் கைவிடப்பட்டுவிட்ட எமது பிரதேசத்தில் இவ்வாறு புதிய மூலப்பொருட்களை கொண்டு புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி இலகுவான முறையில் வீடுகள் அமைக்கப்படுவதை எம்மால் எவ்வளவு காலத்துக்கு தவிர்க்க முடியும் என்பதே இப்போது எம்முன்னால் உள்ள கேள்வியாகும்.

எற்கனவே எமது நாட்டில் வீடமைப்பிற்கும் இதர தேவைகளுக்கும் சீமெந்து மற்றும் மரத்தின் பாவனையில் பெரும் பங்கை இரும்பும், அலுமீனியமும், கன்னாரும் மாற்றீடு செய்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

புதிய கண்டுபிடிப்புக்கள், புதிய தொழில் நுட்பங்கள் அறிமுகமாகும் போது அவை பல கேள்விகளை எழுப்புவது யதார்த்தமே. ஆனால், காலப்போக்கில் தவிர்க்க முடியாமல் அவை அத்தியாவசியமானவைகளாக ஆகிவிடுகின்றன. இந்த வகையில் பொருத்து வீடுகளும் எதிர்காலத்தின் தவிர்க்க முடியாதவைகள் ஆகலாம். ஆனால், அவை பொருளாதார முக்கியத்துவம் பெறுகின்ற போது வறிய மக்களும் கீழ் நிலை மத்தியதர வர்க்கத்தினரும் அவற்றை எட்ட முடியாதவர்களாக ஆகி விடுவர்.

இங்கு நாளை கிடைக்கும் எனச் சொல்லப்படும் பலாக்காயை விட இன்று கிடைக்கும் களாக்காயை பெற்று விட வேண்டும் என்பது தமிழர்களுக்கான அரசியற் தீர்வு விடயத்தில் மட்டுமல்ல இந்த பொருத்து வீட்டுத் திட்டத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறையாக உள்ளது.

அரசியல் அதிகார அரங்கங்களில் இப்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் கடந்த காலங்களில் தமிழ் மக்களை பட்டு வேட்டிக்கு ஆசை காட்டி அழைத்துச் சென்று கடைசியாக கட்டிய கோவணமும் இல்லாமல் ஆக்கியவர்கள் என்பதை மறந்து விடாமல் இருப்பது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலில் இருந்து ஒதுங்கிவிடத் தோன்றுமளவிற்கு சில ஊடகங்கள் ஊடக தர்மமின்றி மிக மோசமாக எழுதுவதாகத் தெரிவித்துள்ள வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் எதையும் எழுதிவிட்டு போகலாம் என்ற ஊடக எழுத்திற்காக நான் அடிபணியப் போகிற ஆள் இல்லை. ஒரு பெண்ணாக அரசியலுக்கு நான் விரும்பி வரவில்லை. வரவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. தர்மம் இல்லாமல் எழுதுகின்ற ஊடக எழுத்துகள் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகிறது எனவும் கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 10ம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற எழுக தமிழ் நிகழ்வில் பங்கேற்ற அனந்தி சசிதரனுக்கு மேடையில் பேச இடம் தரவில்லை என அவர் கண்டனம் வெளியிட்டதாகவும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனை வைத்து சில அரசியல் கட்சிகள் பிழைப்பு நடத்துவதாகவும் அனந்தி கூறியதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அச் செய்திக்கு மறுப்புத் தெரிவித்து யாழ் ஊடக மையத்தில் 13.02.2017 அன்று விளக்கமளித்து உரையாற்றும்போதே அனந்தி சசிதரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலிருந்து சென்று நான் எழுக தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தேன்.

எழுக தமிழ் நிகழ்வில் பல ஆண்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் பேரவையை சேர்ந்த ஒரு பெண் இருந்தார். நான் அவர் பெண்கள் சார்பாக உரையாற்றுவார் பெண்களின் பிரச்சினை தொடர்பாக எடுத்துச் சொல்லுவார் என நினைத்தேன். ஆனால், அவருக்கு பேசுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை போன்றே தமிழ் மக்கள் பேரவையும் பெண்களுக்கான அங்கீகாரத்தை வழங்க வில்லை என்பது பொதுவான அபிப்பிராயம்.

இந்த விடயத்தை மனதிற் கொண்டுதான் பெண்களுக் கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற கருத்தை கூறியிருந்தேன் - அதையும் நான் ஊடகங்களிற்கு எழுத்து மூலமாகவே, நேரடியான பதிவாகவோ கொடுக்கவில்லை.

இயக்கமாக வளர்ந்து வருகின்ற இந்த தமிழ் மக்கள் பேரவை ஆரம்பத்திலேயே சரியான நிலையை கொண் டிருக்க வேண்டும். அதுமட்டுமல்ல வர்க்க வேறுபாடு இன்றி, சாதி, மத வேறுபாடுகளின்றி அடிமட்ட மக்களுக் குள் ஒரு பேரியக்கமாக வளர்வதற்கு இது பெரிய தடை யாக இருக்கும். 60 வீதமான பெண்கள் உள்ள நாட்டில் பெண்களுக்கான அங்கீகாரத்தை இவர்கள் ஆரம்பத் திலேயே வழங்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும்.

எந்த ஒரு தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியிலும் நான் இதைக் கூறியிருக்கவில்லை. பொதுவாக பெண்களுடைய குரல் ஒலிக்க வேண்டும், பெண்களிற்குரிய சம அங்கீகாரம் கிடைக்கவேண்டும் என்ற ஆதங்கத்தில் கூறிய எனது கருத்தைத் திரிபுபடுத்தி மிக மோசமாக எழுதப் பட்டிருக்கிறது. முதல் முதலாக சுவிஸ் நாட்டில் இருந்து வருகின்ற "தினக்கதிர்" இணையத்தளம் தன்னுடைய விரும்பத்திற்கு ஏற்றது போல தலைப்பையும் போட்டு திரிபுபடுத்தி எழுதியிருந்தது.

இதற்கெதிராக நான் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத காரணம் என்னவென்றால் இந்த "தினக்கதிர்" இணையத்தளம் இலங்கையில் பதிவு செய்யப்படாத ஒரு இணையத்தளமாகும்.

அண்மைக்காலமாக இங்கு பதிவு செய்யப்படாத பல இணையத்தளங்கள் தங்களுடைய தேவைக்கு ஏற்ற மாதிரி எழுதிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களிற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கையை எடுக்க முடியா மலிருக்கின்றது.

திரிபுபடுத்தப்பட்ட அச் செய்தியை அடியொற்றி காலைக்கதிர், உதயன் பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டிருந்தன.

பதிவில்லாத இணையத்தளங்கள் எதையும் எழுதி விட்டுப் போகட்டும் என நான் சாதாரணமாக விட்ட விடயத்தை, இங்குள்ள அச்சு ஊடகங்களான உதயன், காலைக்கதிர் போன்ற பத்திரிகைகள் தங்கள் இஸ்டத் திற்கு பிரசுரித்திருப்பது மிகச் சிரமமாக இருக்கிறது.

எழுக தமிழ் நிகழ்வுக்கு போய் வந்த பின் எனக்கு காய்ச்சலாக இருந்த போதும் இதை முறியடிக்க வேண்டும் என்பதற்காகவே நான் இங்கு வந்தேன்.

தமிழ் மக்கள் முன்னணி மீதுள்ள காழ்ப்புணர்ச்சியை தாங்கள் நேரடியாக வெளிப்படுத்த வேண்டும். அதற்கு என்னைப் பயன்படுத்திக்கொண்டிருப்பது ஊடக தர்மம் இல்லை. இதனை ஆரம்பித்து வைத்ததே தினக்கதிர் பத்திரிகையின் இரா.துரைரத்தினம். அவரை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஐக்கிய நாடுகள் சபையில் நான் அவரை கண்டால் கூட கதைப்பதில்லை. நான் அரசியலுக்கு வந்த கடந்த காலங்களில் பல முறை என்னை மோசமாக விமர்சித்த ஒருவர். என்னிடம் ஒரு வார்த்தை கேட்காமல் வேறு இடங்களில் தனக்குள்ள விசுவாசத்தைக் காட்டுவதற்காக -பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணான- என்னைப் பலிக்கடா ஆக்குவது ஊடக தர்மம் ஆகாது.

எனக்கு மிக மனவருத்தமாக இருந்தது ஒரு ஊடகம் எழுதுகின்றது என்றால் மற்றைய ஊடகம் இவ்வாறான ஒரு செய்தி உண்மையா என்று எங்களிடம் கேட்க வேண்டும்.




"அனந்தி பணம் சம்பாதிக்கவில்லை. வெறும் அல்சர் நோயையும், சுகர் நோயையும் தான் உழைத்து வைத்திருக்கிறார். மிகப் போக்கிலித்தனமான எழுத்துக்களை இரா. துரைரத்தினம் அவர்கள் நிறுத்த வேண்டும்"

அதுவும், உதயன் பத்திரிகையிலிருந்து ரெலிபோன் எடுத்து தமிழ் மக்கள் முன்னணியினரைப் பற்றி இவ்வாறு கூறினீர்களா? எனக் கேட்டபோது "இந்த விடயம் தொடர்பாக உதயன் பத்திரிகைக்கு எந்த ஒரு விடயத்தையும் கூற விரும்பவில்லை" என நான் மிகத் தெளிவாகக் கூறினேன்

காரணம் கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது உதயன் பத்திரிகை, மிகத் தெளிவாக, நான் அரசாங் கத்துடன் சேர்ந்து விட்டேன் என்று கோத்தபாயவின் கருத்துக்களை கேட்டு எனக்கு எதிராக எழுதியிருந்தது.

அதுமட்டுமல்ல தொடர்ந்து மிக மோசமாக எழுதினார்கள். பெண்களிற்கு எதிராக வன்முறைகள் நடந்துகொண்டிருக் கின்றன என்ற ஒரு கருத்தினை நான் மிகத் தெளிவாக நிகழ்வு ஒன்றில் கூறியபோது "அனந்தியைப் பார்த்து கண் அடிக்கின்றார்கள;" என மோசமாக எழுதியிருந் தார்கள்.

அனந்தி கூறுகின்ற நல்ல, ஆக்கபூர்வமான கருத்துக் களை விட்டுவிட்டு பன்னாடை போன்று மேலிருக்கின்ற கழிவுகளை மட்டும் எடுத்து எழுதிவருவது ஊடக தர்மமில்லை.

மிக மனவருத்தமாக இருக்கின்றது. ஒரு பெண்ணாக பல பிரச்சினைகளிற்கு முகம் கொடுத்துக்கொண்டிருக் கின்ற நான் இவர்கள் எழுதுகின்ற நியாயமில்லாத இவ்வாறான எழுத்துக்களிற்கு எதிராக அடிக்கடி நீதி மன்றம் செல்வதோ, பொலிஸ் நிலையம் செல்வதோ எனக்கு பொருத்தமில்லாத ஒன்று. இவர்கள் இதை மாற்றிக்கொள்ள வேண்டும். எங்கள் கஸ்ரத்திலும் எங்கள் கவலையிலும் இவர்கள் குளிர்காய விரும்பிக்கொண்டிருக் கின்றார்கள்.

தமிழ் மக்கள் பேரவையின் பல செயற்பாடுகளை நான் வரவேற்றிருக்கிறேன். அவர்களுடன் ஒத்துப் போகின்றேன். அவர்களிடம் வேறு எந்த எதிர்பார்ப்பும் எனக்கு இருக்கவில்லை.

மட்டக்களப்பில் வைத்து தெலைபேசி வாயிலாக என்னைக் கேட்டார்கள், மகள், உங்களை மேடையில் ஏற்றவில்லையா? என்று. நான் அதற்கு "இல்லை" என ஒற்றை வரியில் பதிலளித்து விட்டு சென்று விட்டேன். அதனை வைத்துக்கொண்டு அனந்தியை மேடையில் ஏற்றவில்லை, அனந்தியை நிராகரித்து விட்டார்கள் என இவர்கள் பல கதைகள் எழுதியிருக் கிறார்கள். பார்க்கும் போது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நான் என்னை மேடையேற்ற வேண்டும் என நினைக்கவும் இல்லை அதனை எதிர்பார்க்கவும் இல்லை.

நான் தமிழரசுக் கட்சியின் மகளிர் அணி செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்பும், கட்சியின் அடிப்படை உறுப்பினராக இருக்கின்றேன். கட்சியின் கட்டுப்பாடுகளை மீறித்தான் "காணாமல் போன ஒருவருடைய மனைவியாக" நான், எழுக தமிழ் நிகழ்வில் பங்குபற்றியிருந்தேன். எனக்கு வேறு எந்த உள்நோக்கமும் இருக்கவில்லை.

பேப்பரும் பேனையும் இருக்கிறது என்பதற்காக எதையும் எழுதிவிட்டு போகலாம் என்று நினைத்து விடக் கூடாது. எனக்கு மிகவும் மன வேதனையாக இருக்கிறது ஐயோ! அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும் என்ற அளவிற்கு இவர்களது ஊடக எழுத்துக்கள் நிர்ப்பந்திக்கின்றன.

இந்த சந்தர்ப்பத்தில் தினக்கதிர் இரா. துரைரட்ணம் பற்றி நான் பேச வேண்டும் இந்தப் பிரச்சினையை மறைக்கும் முகமாக அடுத்த ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். என்னுடைய படத்தையும் போட்டு பணம் சம்பாதிக்கும் நோக்கில்தான் ஜெனிவா பயணங்களை மேற்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த இடத்தில் நான் சகல மக்களுக்கும் சர்வதேச மெங்கும் உள்ளவர்களும் அறியும்வகையில் பகிரங்க மாக ஒரு கருத்தினை சொல்லுகிறேன். அனந்தி ஐ.நா சபைக்கு செல்வதற்காக ரிக்கற் போட்டுக் கொடுத்தோம், ஹோட்டல் வசதி செய்து கொடுத் தோம், போக்குவரத்து ஒழுங்குகள் செய்தோம் என்று யாரும், எந்த ஒரு அமைப்பும் சொல்ல முடியாது. நாங்கள் மிகச் சிரமப்பட்டுத்தான் அங்கு சென்று வருகின்றோம்.

அனந்தி பணம் சம்பாதிக்கவில்லை. அனந்தி வெறும் அல்சர் நோயையும், சுகர் நோயையும்தான் உழைத்து வைத்திருக்கிறார். மிகப் போக்கிலித் தனமான எழுத்துக்களை இரா. துரைரத்தினம் அவர்கள் நிறுத்த வேண்டும்.

புலம்பெயர் மக்களிற்கு மிகத் தெளிவாகத் தெரிய வேண்டும். நான் மூன்று பெண் பிள்ளைகளையும். தனியாக ஒரு பெண்ணுடன் விட்டுவிட்டு மிகச் சிரமப் பட்டே எனது பணிகளை ஆற்ற ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று வருகின்றேன்.

எதையும் எழுதிவிட்டு போகலாம் என்று எழுதப்படும் ஊடக எழுத்திற்காக நான் அடிபணியப் போகிற ஆள் இல்லை. மிகக் கவலையாக இருக்கிறது என்ன வென்றால் ஒரு பெண்ணாக, அரசியலுக்கு நான் விரும்பி வரவில்லை. ஆனால், வரவேண்டிய நிர்ப் பந்தம் இருந்தது. இவ்வாறு தர்மம் இல்லாமல் எழுதப்படுகின்ற ஊடக எழுத்துகள் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகிறது.

தேர்தல் காலத்தில், மக்களுக்கு பலவற்றை செய்வோம் என்று கொடுத்த வாக்குறதிகளுக்கு அமையவே ஐ.நா சபைக்கு தொடர்ந்தும் - இவர்களை போன்றவர்களின் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் - சென்று வருகிறோம். ஐநா சபையில் கிருபாகரன் என்ற மனித உரிமை செயற்பாட்டாளராக தன்னை கூறிக்கொள்பவரும் கூட மிக மோசமாக எங்களை எழுதிக் கொண்டிருக்கின்றார். இவையெல்லாம் நிறுத்தப்பட வேண்டும் தங்கள் சுய லாபத்திற்கு எங்களை வைத்து பிழைக்க வேண்டாம் என்ற கோரிக்கையை இன்று வைக்கின்றேன் என அனந்தி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்து முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் அரசால் அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர் இலங்கையில் துன்புறுத்தப்பட்டது ஏன்?

*க.சந்திரகுமார் கிளிநொச்சி*

**கேள்வி: வடமாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பேச்சுக்களும் செயல்களும் எப்படி இருக்கின்றன?**

பதில்: எப்படி அவற்றை விபரிப்பது என்று தெரியாத அளவிற்கு இருக்கின்றன.

அதிகார மோகம் என்பதா, அறியாமை என்பதா, எதிர்பாராத, எதுவித பிரயத்தனங்களும் இல்லாது சுலபமாகப் பெற்ற பதவியும் பிரபல்யமும் தந்த ருசி, செருக்கு என்பதா, புகழ்ப் போதை அல்லது மயக்கம் என்பதா, வடமாகாண முதலமைச்சர் என்ற கோதாவில் அவரிடமிருந்து மக்களால் எதிர்பார்க்கப்பட்ட வாழ்வாதரங்களை வழங்க வக்கில்லாத தனது கையாலாகாத் தனத்தை மறைக்கும் முயற்சிகளின் விளைவான குழறுபடிகள் என்பதா, தன்னைத் தானே அதீத அறிவாளி, தானே தமிழ் மக்களின் புதிய ஆபத்பாந்தவன் என்ற பிரமை மேவிய நினைப்பினால் பாதிக்கப்பட்டவர் என்பதா, அல்லது இவை எல்லாம் சேர்ந்த ஒரு கூட்டு என்பதா, அல்லது ஒட்டுமொத்தமாக, ஈழத்தமிழர்களின் தலைவிதி இதுதான் என ஆசுவாசம் கொள்வதா என்று தெரியவில்லை!


ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் என்ற வகையில் ஆற்ற வேண்டிய பணிகளில் நிர்வாகத் திறமையை வெளிப்படுத்தாமை, அதற்காக துறைசார்ந்த தகுதி படைத்தவர்களிடம், அனுபவம் கொண்டவர்களிடம் முறையான ஆலோசனைகள் கேட்காது, தப்பாக வழி நடாத்தும் குழப்பக்கார்களின் இச்சைகளுக்கு ஏற்பவோ, தன்னிச்சையாகவோ, தன் புகழ் பாடும் பஜனைக் கோஷ்டிகளினது ஆட்டங்களுக்கேற்பவோ விளைவுகளைக் கணக்கெடுக்காது பேசுகிறார் அவ்வப்போது அறிக்கைகள் விடுகிறார். பதவியேற்று மூன்று ஆண்டுகளாயும் வடமாகாண அரசாங்க நிர்வாகம் சீர்கெட்டு, அவரே எதுவித கூச்சநாச்சமுமின்றி ஒத்துக்கொள்ளும் அளவிற்கு ஊழல்களாலும், மோசடிகளாலும், முறைகேடுகளாலும் ஏமாற்றுக்களாலும் வழிந்து கிடக்கிறது. வடமாகாண மக்களின் பல்வேறு பிரச்னைகள் தீர்க்கப்படாமலும், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், சட்டம், ஒழுங்கு ஆகிய துறைகளிலும் ஒப்பீட்டளவில் மற்றைய மாகாணங்களிலும் பார்க்க மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பது. ஆனால், அவர், தானே ஈழத் தமிழர்களின் புதிய தேசியத் தலைவன் என்ற கற்பனையில் மூழ்கியவராய், மாலையுடன் மேள தாளம் முழங்க, நெற்றியில் விபூதி, குங்குமம் துலங்க வலம் வருவதைப் பெருமையாகக் கொள்கிறார். தனது நிர்வாக எல்லைகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களைப் பற்றிப் பேசிப் பேசியே, அவற்றின் நடைமுறைச் சாத்தியம் பற்றிய கரிசனை இல்லாது, எதுவித சுயவிமர்சனமோ, தன்னைத் தானே எடை போட்டு திசை மாறாது இருப்பதற்கான சுயமதிப்பீடோ, குறிப்பாக எவற்றிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அவற்றை நோக்கிய பேச்சுக்களும் நடைமுறைகளும், செயல்களும், அரசியல் அணுகுமுறைகளும் அற்றவராக இருக்கிறார் தனது நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களில் மூக்கை நுழைப்பதே தனது தொழிலாகக் கொண்டிருக்கிறார் போதாதற்கு, அவரது உறவினருக்கு பதவி வேண்டி சர்வதேச அமைப்பொன்றிற்கு நிபந்தனைகள் விதிக்கின்றார். சமீபத்தில், "இலங்கை அரச படைகளை நோக்கி இயக்கங்கள் துப்பாக்கி தூக்க முன்னரே அரச படைகளும் குண்டர்களும் அப்பாவித் தமிழ் மக்களை இன்னலுறச் செய்து வந்துள்ளனர்" என்று ஏதோ நீண்ட கால நித்திரைக்குப் பின் இப்பொழுதுதான் துயில் நீங்கி எழுந்தவர் போல் திருவாய் மலர்ந்துள்ளார்!

அவ்வப்போது அவர் வெளியிடும் அறிக்கைகளாலும் அவரது பேச்சுக்களாலும் தமிழர்கள் சிங்களவர்கள் மத்தியிலுள்ள இனவாதிகளுக்கும், இனவெறியர்களுக்கும் தொடர்ந்து தீனி போட்டுக்கொண்டிருக்கிறார் இருக்கிறவற்றையும், இருப்பவர்களையும் இல்லாமல் செய்யும் கைங்கரியத்திற்குத் துணை போகிறார் இலங்கையின் இருதரப்பிலும் இயங்கும் இனவாதிகளுக்கும், இனவெறியர்களுக்கும் தனது பேச்சுக்களாலும், செயல்களாலும் தூபம் போடுகிறார் மகிந்த ராஜபக்சாவின் மீள் வருகைக்குத் தமிழர்களின் பெயரால் தன் பங்கைக் கச்சிதமாகச் செலுத்துகிறார் சிங்களவர்கள் மத்தியில் மகிந்த ராஜபக்சாவிற்காக வாசுதேவா நாணயகாரா போன்றோர் வெளிப்படையாக செயற்படுவது போல, தமிழர்கள் மத்தியில் வாசுவின் சம்பந்தியான சி.வி. விக்னேஸ்வரன் போன்றோரின் நடவடிக்கைகள் மறைமுகமாக உதவுகின்றன.

படித்தவராகவும், இறைபக்தி கொண்டவருமாக வலம்வரும் ஒருவரின் இலட்சணமா இவை?

ஓய்வுபெற்று, பஜனை பாடிக்கொண்டிருந்த நீதியரசர் விக்னேஸ்வரனை, இரா. சம்பந்தன் வடமாகாண முதலமைச்சராக அரசியலுக்கு கொண்டு வந்தபோது, வாடும் பயிர்களாக இருந்த தமிழர்களுக்கு புதிய அணுகுமுறைகள் மூலம் ஒரு தென்றலாக இருப்பார் என்று நம்பிக்கை கொண்டு அவரது அரசியல் பிரவேசத்தை வரவேற்று எழுதியவர்களில் நானும் ஒருவன்.

தென்றலாக இருக்க வேண்டியவர் இப்படிப் புஸ்வாணமாகிப் போய் தமிழர்களின் வாழ்வை மேலும் கருமையாக்கிக் கொண்டிருக்கின்றாரே!. எவ்வளவு பெரிய ஏமாற்றம்!!.



## அபிமன்யு பதில்கள்

*சி.சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம்*

**கேள்வி: சுவிற்சர்லாந்து நாட்டிலிருந்து அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஒருவர், தனது மனைவி, பிள்ளைகளுடன் வெளியேற்றப்பட்ட பின்னர், இலங்கை அரசு அதிகாரிகளால் கைது செய்யபட்டு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப் பட்டமையினால், சுவிற்சர்லாந்து திரும்பவும் அவர்களை நாட்டுக்குள் அனுமதித்ததோடு, நஷ்டஈடும் வழங்க நேரிட்ட செய்தி பற்றி?**

பதில்: இலங்கையில் அந்தக் குடும்பம் வசித்திருந்தால், போதிய வாழ்வாதாரம் இல்லாமை, வேலையில்லாத் திண்டாட்டம், உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்மை, முயற்சிகளுக்கு ஈடாக வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாமை ஆகியவற்றால் திண்டாடியிருப்பார்கள் பிள்ளைகளின் எதிர் காலமும் கல்வி, மேற்படிப்பு, வேலை வாய்ப்பு ஆகிய ரீதியில் மிகவும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டிருக்கும். எனவே, அவர்கள் திரும்பவும் சுவிற்சர்லாந்து நாட்டுக்கு அனுமதித்த அந்த நாட்டின் பெருந்தன்மையையும், மனித உரிமைப் பண்புகளையும், நீதி வழங்கலையும் பாராட்டுவதோடு, அந்தக் குடும்பத்தின் மகிழ்ச்சியில் நானும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

ஆனால், இந்தச் சம்பவம் எழுப்பும் சில கேள்விகள் என் மனதை நெருடுகின்றன.

'அந்தக் குடும்பம் சுவிற்சர்லாந்திலிருந்து திருப்பி அனுப்பப்படாது, அப்படி அனுப்பப்பட்டால் கணவன், இலங்கை அரச படையினரின் கைதுக்கும், சித்திரவதைகளுக்கும் ஆளாவார்' என்று அந்த நாட்டிலுள்ள மனிதஉரிமை அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்கள் அரசினால் வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிகழ்வுகளும், இலங்கையில் அவர்களுக்கு நடப்பதை அறிவதற்கு சம்பந்தப்பட்ட மனித உரிமை அமைப்புகள் ஆர்வமாக இருக்கும், கண்காணிப்புகளை மேற்கொள்ளும் என்று இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கும், அரசு பாதுகாப்புப் படையினருக்கும் நிச்சயமாகத் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும் அவரைக் கைது செய்தும், துன்புறுதல்களுக்கு உள்ளாக்கியுமிருக்கிறார்கள்.

இதனால், இலங்கை அரசாங்கத்திற்கும், பாதுகாப்புப் படைதரப்புக்கும் அவதூறு ஏற்படும், சர்வதேச சமூகத்தின் பார்வையில் கெட்ட பெயர் ஏற்படும் என்று தெரிந்தும் ஏன் அதனைச் செய்தார்கள்? அப்படியான கெட்ட பெயர் பற்றிய அக்கறை நிர்வாக ரீதியாகவாவது அவர்களுக்கு இல்லாதிருக்கும் என்று கூற முடியாது. அப்படியானால் இலங்கை அரசிற்குக் கெட்ட பெயர் ஏற்பட வேண்டும் என்ற அரசிற்கு எதிரான சக்திகளின் நோக்கமா?

அல்லது, அகதி அந்தஸ்து கோருபவர்களை வெளிநாடுகள் திரும்பவும் இலங்கைக்கு அனுப்பாதிருக்க வேண்டும் என்ற இலங்கைச் சிங்களப் பேரினவாதிகளின் மறைமுக நோக்கமா?

அப்படியானால், அதற்கான காரணங்களாக, வெளியேறிவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படாமல் அந்தந்த நாடுகளிலேயே இருந்தால், தமிழர்களின் விகிதாசாரம் தமிழ் மண்ணில் குறைவதனால், தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் குறையும் வேலை வாய்ப்பு, பல்கலைக்கழக அனுமதி ஆகியவற்றில் சிங்கள இனத்தைச் சேர்ந்தோருக்கான சாதக நிலைமை அதிகமாகும் வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து பெற்று வாழ்பவர்கள் எப்படியும் சில வருடங்கங்கள் கழித்த பின்னர் அடிக்கடி இலங்கைக்கு வந்து தாராளாமாகச் செலவு செய்வதால் சுற்றுலா வருகை எண்ணிக்கையில் அதிகரிக்கும் அதனால் வரும் அரசாங்க வருமானம் பெருகும் அவர்கள் தமது உற்றார் உறவினர்களுக்கும், ஆலயங்கள், வீடுகள், பாடசாலைகள் ஆகியவற்றிற்கும் அனுப்பும் பணங்களினால் அந்நியச் செலவாணி அதிகரிக்கும் - இவையெல்லாம் இலங்கையில் வாழும் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு அனுகூலமாக இருக்கும் என்ற கணக்குகளாலும் கணிப்பினாலும் இருக்கலாம். இந்த அடிப்படைகள்தான் தமிழ் அகதிகள் சம்பந்தமான விடயங்களில் சிங்கள அதிகாரிகளின் செயற்பாடுகளைத் தீர்மானிக்க வைக்கின்றதோ, வைத்ததோ என்ற எண்ணத்தை நிகழ்வுகள் தோற்றுவிக்கின்றன. வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களின் இலங்கை அரசிற்கு எதிரான செயற்பாடுகள் சிங்கள அரசிற்கு ஒரு சிறிய எரிச்சலை ஏற்படுத்தும் விவகாரந்தான் என்றாலும், காலப் போக்கில் சர்வதேச அரசாங்கங்களின் -அவ்வப்போது மாற்றம் பெறும் - உண்மையான நிகழ்ச்சி நிரல்களை அறிவுபூர்வமாக அடையாளம் கண்டு, சமாளித்து விடலாம். இத்தனை அனுகூலங்களுடன் ஒப்பிடுகையில் அந்த எரிச்சல் அப்படி ஒன்றும் பெரிதல்ல என்ற சிங்களப் பேரினவாதிகளின் கணிப்பாகவும் இருக்குமோ?

இந்த அடிப்படையே, கணக்கும் கணிப்புகளுமே, பெரும்பான்மையான தமிழர்கள் இலங்கையை விட்டுச் சட்டவிரோதமாக வெளியேறுவதற்கு, அரசின் அதிகாரிகளே - பணம் பண்ணுவதற்கும் ஒரு மேலதிக வழி என்பதற்கு அப்பால் - அனுசரணையாக இருந்தமைக்குக் காரணமோ என எண்ணத் தோன்றுகிறது.

*க.ஆனந்தராசா வவுனியா*

**கேள்வி: வடமாகாண அமைச்சர்கள் மீதான ஊழல்கள், மோசடிகள், முறைகேடுகள் தொடர்பான விசாரணைக் குழுவின் காலம் நீடிக்கப்பட்டு விட்டதாமே?**

பதில்: எத்துணை பம்மாத்து, கண்துடைப்பு இது! - இது ஒன்றே போதுமே வடமாகாண அரசாங்கத்தின் கேவலமான, வெட்கக்கேடான, சீர்கெட்ட நிலைமையை எடுத்துக்காட்ட!

விசாரணைக் குழுவை அமைத்தவர் வேறு யாருமல்ல - சாட்சாத் கனம் நீதியரசர் வடமாகாண முதலமைச்சர் அவர்களே! வடமாகாண அமைச்சர்களின் முறைகேடுகள் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள், பொதுமக்களினால் முதலமைச்சருக்கு தெரியப்படுத்தமை மற்றும் அமைச்சர்களை மாற்றவேண்டும் என தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய, இந்த விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. அவர்களின் குற்றச்சாட்டுகளில் ஓரளவாவது நம்பகத்தன்மை இருக்கிறது என்ற அடிப்படையிலேயே அந்த விசாரணைக் குழு ஏற்படுத்தப்பட்டது. எனவே, விசாரணையைத் துரிதமாக முடித்து அவர்கள் குற்றமற்றவர்கள் என்பது நிருபணம் ஆகும் வரை, குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர்கள் தம் பதவிகளிலிருந்து விலகியிருக்க வேண்டும், அல்லது முதலமைச்சர் அவர்களை தற்காலிகப் பதவி நீக்கம் செய்திருக்க வேண்டும். - அதல்லவா நீதி முறைமை? அதல்லவா ஜனநாயகக் கோட்பாடு?

ஆனால், இங்கு எந்த அமைச்சர்கள் மீது ஊழல், மோசடி விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறதோ, அவர்கள் இன்னமும் அந்த அமைச்சுப் பதவிகளைத் தொடர்கிறார்கள்! - இதுதான் முன்னாள் கனம் நீதியரசரின் நீதி பரிபாலனம்! இதுதான் தமிழர்களின் அரசியல் முதிர்ச்சி, நிர்வாகம்! யாரிடம் சொல்வது? யாரிடம் நோவது?


-கொடுத்துப் பாருங்கள் இவர்களிடம் இன்னும் அதிக அதிகாரத்தை - நாறடித்து விடுவார்கள்!

எப்படித்தான் தமிழர்களும் தமிழ் ஊடகங்களும் இதனை ஏற்றுக் கொள்கிறார்களோ? - அவர்களின் அலட்சியம் பிரமிப்பையும் வேதனையையும் ஒரு சேர ஏற்படுத்துகிறது! - அட இது என்ன நியாயமோ, என்ன நீதியோ, என்ன சமூகமோ, என்ன மக்களோ!,

அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

அபிமன்யு பதில்கள்
கண்ணோட்டம்
இல: 294 A, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் அமீன்
சாவகச்சேரி

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை,
நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



தோழர் கோபி
சாவகச்சேரி

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| இ.பாக்கியராசா | பாப்பா | 28.02.1987 | ஏறாவூர் |
| க.திருநாவுக்கரசு | அல்பேட் | 28.02.1987 | காரைதீவு |
| எஸ்.புத்திசிகாமணி | முரளி | 03.02.1985 | ஏறாவூர் |
| எம்.சிறீதரன் | சிறி | 03.02.1985 | வந்தாறுமூலை |
| எல்.அருள்தாஸ் | அருள் | 03.02.1985 | ஆறுமுகத்தான் -குடியிருப்பு |
| எஸ்.அரசரட்ணம் | உதயன் | 03.02.1985 | ஆறுமுகத்தான் -குடியிருப்பு |
| | ரவி | 20.02.1986 | மண்டூர் |
| | ராஜன் | 02.02.1986 | மண்டூர் |
| கே.யோகராஜான் | ராஜா | 28.02.1986 | ஏறாவூர் |
| கே.மகேசன் | சண் | 28.02.1986 | கிரான் |
| பி.யோகேந்திரன் | யோகா | 12.02.1986 | பேத்தாளை |
| வை.தெய்வசீலன் | செழியன் | 28.02.1986 | களுவாஞ்சிக்குடி |
| கே.சகாயநாதன் | | 12.02.1986 | ஏறாவூர் |
| என்.நாகேஸ்வரன் | யோகா | 26.02.1986 | வாழைச்சேனை |
| | இந்திரன் | 16.02.1987 | சேனைக்குடியிருப்பு |
| | ரஜனி | 04.02.1987 | மண்டூர் |
| | குட்டி | 00.02.1987 | உன்னிச்சை |
| என்.குமார் | கண்ணன் | 18.02.1987 | கிரான் |
| எம்.குணரட்ணம் | றெட்டு | 12.02.1987 | புதுக்குடியிருப்பு |
| என்.ஆனந்தன் | சாந்தன் | 03.02.1987 | தம்பிலுவில் |
| | ரவி | 20.02.1986 | மண்டூர் |
| | பாலா | 12.02.1989 | சித்தாண்டி |
| நித்தி | | 12.02.1989 | அக்கரைப்பற்று |
| நவீனன் | | 12.02.1989 | மட்டக்களப்பு |
| நல்லதம்பி | மணி | 13.02.1986 | வாழைச்சேனை |
| தாஸ் | | 12.02.1989 | திருகோணமலை |
| கமலநாதன் | ரமேஸ் | 08.02.1988 | மூதூர் |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| சோமு ஜெகநாதன் | அமீன் | 20.02.1986 | சாவகச்சேரி |
| ம. மரியசீலன் | சதீஸ் | 28.02.1989 | இத்தாவில் |
| சி. ரவிச்சந்திரன் | ரவி | 25.02.1989 | சங்கானை |
| | குமார் | 22.02.1989 | கம்பர்மலை |
| மா. நேசராசா | சுரேஸ் | 10.02.1988 | |
| வசந்தன் | | 07.02.1990 | கெருடாவில் |
| | றெஜி | 03.02.1990 | |
| க. பாலசுப்ரமணியம் | மணியம் | 23.02.1990 | பலாலி |
| சி. தமிழ்செல்வன் | ரவி | 16.02.1991 | சுன்னாகம் |
| செ. தங்கத்துரை | | 20.02.1990 | சுன்னாகம் |
| வ. ஞனசீலன் | | 25.02.1990 | நவாலி |
| வ. மனோகரன் | | 00.02.1990 | சாவற்கட்டு |
| வ. ஆனந்தசேகரம் | | 00.02.1990 | மயிலிட்டி |
| த. நாகேஸ்வரன் | | 00.02.1990 | மயிலிட்டி |
| க. குணரட்ணம் | | 00.02.1990 | மயிலிட்டி |
| க. இராசரத்தினம் | | 00.02.1990 | மயிலிட்டி |
| அ. ஸ்ரீபாலபிரேம்நாத் | பிறேம் | 25.02.1989 | மயிலிட்டி |
| பா. நாகமுத்து | | 12.02.1990 | மல்லாகம் |
| அ. பன்னீர்செல்வம் | | 00.02.1990 | பலாலி |
| கற்கண்டு | | 00.02.1990 | பலாலி |
| கு. சுதாகரன் | | 00.02.1990 | பலாலி |
| கொஞ்சும்கிளி | | 00.02.1990 | பலாலி |
| பொன்னப்பா எட்வேட் | | 00.02.1990 | பலாலி |
| பயஸ் அலோசியஸ் | | 10.02.1990 | குருநகர் |
| சி.சிவசிறி | | 12.02.1990 | யாழ்ப்பாணம் |
| பொ. பூமிநான் | | 12.02.1990 | சாவகச்சேரி |
| கா. ஜெயரத்ன | | 08.02.1990 | குருநகர் |
| அ. உதயகுமார் | | 00.02.1990 | குருநகர் |
| பொ. சிறிதரன் | குட்டி | 28.02.1990 | ஏழாலை |
| சி. சுதாகரன் | கோபி | 00.02.1990 | சாவகச்சேரி. |
| மா. செல்வநாயகம் | நசீர் | 00.02.1990 | இணுவில் |
| நா. மதிர்சன் | | 26.02.1990 | சாவகச்சேரி |

**தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று பெப்ரவரி மாதத்தில் உயிர் நீத்த தோழர்களில், எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம். இங்கு நினைவு கூரப்பட்டுள்ள தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்த பங்களிப்புச் செய்வதுடன் இங்கு பிரசுரிக்கத் தவறிய, தோழர்கள் பற்றிய தகவல்கள் அவர்களது புகைப்படங்கள் என்பவற்றை எமக்குக் கிடைக்கச் செய்யுமாறு அன்பர்கள், நண்பர்கள், குடும்பத்தவர்கள், தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.**

# இழைத்த தவறுகளுக்கு விலைகொடுக்கும் சமூகம்

ஒரு பெண்ணாக எமது சமூகத்தில் அனந்தி எதிர் கொள்கின்ற கஷ்டங்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் அவருக்கு கவலையை. மன உளைச்சலை ஏற்படுத்தியிருப்பதனை எவராலும் விளங்கிக் கொள்ள முடியும். அவரது கோபம் நியாயமானதே.

எங்கள் சமூகத்தில் பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்படாமை. அங்கீகாரமின்மை. எந்த துறையிலும் பெண்கள் முன்னணிக்கு வர முனையும் போது பொது தளத்தில் எதிர்கொள்ள நேரும் பிரச்சினைகள் பல உள்ளன.

அனந்தி குறிப்பிடுவது போன்று ஊடக தர்மம் பேணப்படாது செய்திகளை புனைதல். அரசியல் சார்புக்கேற்ப செய்திகள் திரிக்கப்படல். சாராம்சத்தை வேண்டுமென்றே தவிர்த்தல். தத்தமது அரசியல் சார்பு நிலைக்கேற்ப செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுதல். புறந்தள்ளப்படுதல். அவதூறு களை பரப்புதல் என நீளும் போக்குகளால் அனந்தியை போன்றே பலரும். ஏன் மொத்த சமூகமும் பாதிப்புகளுக்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது.

எதை எழுதினாலும் -உரிமையாளர் தவிர - யாருக்கும் பொறுப்பு கூறவேண்டிய கடப்பாடின்மை சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை. சட்ட நடவடிக்கை இலகுவானதல்ல என்ற நிலமை. மக்கள் மத்தியில் விழிப்புணர்வின்மை இவை யாவும் ஊடகங்களின் தான்தோன்றித்தனமான போக்கிற்கு காரணங்களாகும்.

இதனால் தனி நபர்கள் மாத்திரமல்ல தமிழ் இனமே போசமான விளைவுளை எதிர்கொண்டு வருகிறது.

அனந்தி தெரிவித்திருக்கின்ற அத்தனை விசமத்தனங்களும். குழறுபடிகளும் எம் மத்தியில் உள்ள அரசியல் கட்சிகள். பொது அமைப்புக்கள். ஊடகங்கள் மத்தியில் நிலவுவது முற்றிலும் உண்மை. ஆனால். இவற்றை கற்பித்தவர்கள். வளர்த்து விட்டதில் பெரும் பங்கு வகித்தவர்கள் புலிகள் என்பது அனந்தி எண்ணிப்பார்க்க விரும்பாத விடயமாக இருந்தாலும் அதுதான் நிஜம். புலிகளின் தலைவரை பற்றியும். புலிகளின் போராட்டம் பற்றியும் எழுதுபவர்கள் மட்டுமே ஊடகவியலாளர்களாக மதிக்கப்பட்டார்கள் உயிர்வாழ அனுமதிக்கப்பட்டார்கள்.

1986 தொடக்கம் 2009 வரை புலிகள் கோலோச்சிய காலப் பகுதியில் சம்பந்தப்பட்டவர்களின் கருத்தை அறிந்தா செய்திகள் வெளியிடப்பட்டன. கருத்துக்கள் பிரசுரமாகின?

1986 ஆம் ஆண்டு இயக்கங்களை தடைசெய்ய முற் பட்ட புலிகள் அந்த இயக்கங்களில் இணைந்திருந்த பெண்களை எவ்வாறு நடத்தினார்கள்?

சந்திரிகா அம்மையாரைப் பற்றி "தேசத்தின் குரல்" வக்கிரமாக ஒலித்தபோது கைதட்டி ஆரவாரம் செய்த மக்கள் கூட்டத்தை கண்டு பூரித்தோம். இப்போ அந்த மக்களுக்காக எழுதுகின்ற ஊடகங்களின் போக்கை மட்டும் குற்றம் சொல்வது சரியா?

இப்போது தான் தெரிவித்த ஒரு கருத்தை திரிபு படுத்தி பிரசுரித்து விட்டார்கள் என்பதற்கு எதிராக அனந்தி பொது வெளியில் வந்து பேச முடிகிறது. கண்டிக்க முடிகிறது. அவற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு ஒரு சில ஊடகங்கள் இருக்கின்றன. ஊடகவியலாளர்களும் இருக்கிறார்கள்.

ஆனால். கடந்த காலத்தை எண்ணிப் பாருங்கள் நியாயமான ஒரு அரசியல் கொள்கையை பின்பற்றிய ஒருவரோ. ஒரு சித்தாந் தத்தின் அடிப்படையில் செயற் பட்ட ஒரு அமைப்போ புலிகளின் காலத்தில் கருத் துக்களை வெளிப்படுத்த முடியவில்லை. சுயாதீன மாகச் செயற்படவும் முடியவில்லை. அனந்தியைப் போன்று அன்று தங்களது உரிமைக்கு குரல் கொடுத்தவர்கள். தங்களது அடிப்படை ஜனநாயக உரிமையை நிலைநாட்ட முனைத்தவர் கள் அந்த அராஜகத்தை எதிர்த்து நின்றவர்கள் உண்மைக்கு புறம்பாக குற்றம் சுமத்தப்பட்டார்கள். துரோகிகளாக்கப்பட்டார்கள். தண்டிக்கப்பட்டார்கள். அவற்றை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் ஊடகங்களும் மக்களும் வைக்கப்பட்டிருந்தார்கள். இன்று அதே ஊடகங்களிட மும். மக்களிடமும் தான் அனந்தி நியாயம் கேட்கிறார்.

அனந்தி சார்ந்த இயக்கத்தின் கடந்த கால நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி அவர் கூறியிருக்கும் கருத்துக்களை புறமொதுக்கு வதோ. அவற்றை வலுவிழக்கச் செய்வதோ அனந்தியின் கவலையையும். கண்ணீரையும் இழிவுபடுத்துவதோ இதன் நோக்கமில்லை. ஆனால். காலங்கடந்தாவது அனந்தியும் தமிழ் சமூகமும் இவற்றை விளங்கிக் கொள்ள வேண்டும். விளங்கிக் கொண்டாலே விமோசனம்

அனந்தியின் கடந்த 3 வருட அரசியலில் அவரது உயர்ச்சிக்குக் காரணமாயிருந்த அதே ஊடகங்களின் போக்கு இப்போது அவருக்கு எவ்வளவு கஷ்டத்தையும் கவலையையும் கொடுத்திருக் கிறது. இந்த அரசியலை விட்டே ஒதுங்கிவிட வேண்டும் என எண்ண வைத்திருக்கிறது.

இந்தச் சமூகத்தில் சுதந்திரமாக கருத்து சொல்ல முடியாமல். சொன்னாலும் ஊடகங்களால் கண்டுகொள்ளப்படாமல். இல்லா ததையும் பொல்லாததையும் புனைந்தும். சோடித்தும். சேறு பூசும் நோக்கத்துடனுமே எம்மை சூழ்ந்திருந்த ஊடகங்களுக்கு மத்தி யில் இன்று வரை 30 வருடங்கள் நின்றவர்கள் எத்தனை கஷ்டங் களை அனுபவித்திருப்பார்கள் கவலைகளுக்கு உள்ளாகியிருப் பார்கள் என்பதும் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் மக்களின் முடிவு இறுதியல்ல இங்கிலாந்து நீதிமன்றத்தின் வியாக்கியானம்




அன்பார்ந்த வாசகர்களே!

இக் 'கண்ணோட்டம்' பத்திரிகையூடாக உங்களோடு தொடர்பு கொள்வது என்பது பெரும் கடமையாக மாறி வருகிறது. சில வினாடிகளில் தொலைபேசி வழியாக சுகத்தை விசாரிக் கலாம். ஆனால் இம் மண்ணில் வாழும் எம்மவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை யார் தொலைபேசியூடாக விபரிப்பார்கள்? தத்தமது கவலைகளை குடும்பங்களோடு பகிர்ந்துகொள்வதோடு அவர்கள் பணி முடிவடைகிறது.

வாசகர்களே,

மிக முக்கியமான பிரச்சனை தற்போது ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் உலுப்பிக்கொண்டிருக்கிறது. இதனைத் தமிழர்கள் இனிமேல் தட்டிக் கழித்துச் செல்ல முடியாது. கணிசமான தமிழ்க் குடும்பங்கள் இதன் விளைவுகளைப் பேசும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

நேரடியாகவே பிரச்சினைக்குள் செல்கிறேன். நீங்கள் அறிந்த படி பிரித்தானிய மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகு வதற்கு வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். இதன் காரணமாக பிரித்தானிய அரசு ஐரோப்பிய ஒன்றியத் திலிருந்து விலகுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் இறங்க வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் தமக்கென சில கட்டுப் பாடுகளை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் செயற்பட்டு வரு கிறது. உதாரணமாக ஐரோப்பிய நாடு ஒன்று ஒன்றியத்தில் இணைய விரும்பினால் அதற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் சில நிபந்தனைகளை எட்டவேண்டும். அதில் ஒன்று அந் நாட்டின் மொத்த தேசிய வருமானம் ஒன்றியத் தினால் விதிக்கப்பட்ட எல்லையை அடையவேண்டும். அதே போன்று ஒன்றியத்திலுள்ள நாடு அதிலிருந்து வெளியேற வேண்டுமானால் பிரமாணம் 50 இனைப் பயன்படுத்தப் போவதாக அறிவிக்கவேண்டும்.

பிரித்தானியாவில் ஆட்சியிலுள்ள கன்சவேட்டிவ் கட்சி அரசு 52 சதவீத மக்களின் ஆதரவை பக்கபலமாகக் கொண்டு பாராளுமன்றத்தின் ஆதரவு இல்லாமலேயே பிரமாணம் 50 இனைப் பயன்படுத்த தயாரானது. பாராளுமன்ற ஆட்சியைக் கொண்டுள்ள பிரித்தானிய அரசு வெறுமனே 52 சதவீத மக்களின் வாக்கினை ஆதாரமாக வைத்து பாராளுமன்றத் தின் ஆதரவு இல்லாமல் நாட்டின் எதிர்காலத்தை மாற்ற முடியாது என பிரஜை ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். பாராளுமன்றத்தின் சம்மதம் தேவை என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இப் பிரச்சனை குறித்து நாம் மிக முக்கியமான அம்சங்களை அவதானிக்க வேண்டும். பாராளுமன்றமும் மக்களால் தெரிவு செய்யப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறவேண்டுமென மக்கள் வாக்களித்த பின்னர் பாராளுமன்றத்தின் சம்மதம் ஏன்? என்ற கேள்வி எழுகிறது. பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி என்ற வகையிலும், பாராளு மன்ற உறுப்பினர்கள் தொகுதிவாரியாக பிரிதிநிதித்துவம் செய்வதாலும் பாராளுமன்ற ஒப்புதல் முதன்மையானது எனக் கொள்ளப்படுகிறது. பாராளுமன்றத்தில் கன்சவேட்டிவ் அரசு மிகவும் சொற்ப பெரும்பான்மையைக் கொண்டுள்ளது. ஆளும் கட்சிக்குள்ளும் கணிசமான தொகையினர் ஒன்றியத் தில் இணைந்திருக்கவே விரும்புகின்றனர். இந் நிலையில் பாராளுமன்ற ஆதரவு கிடைக்காது எனக் கருதியே பாராளு மன்றப் பாதையைத் தவிர்த்தனர். ஆனால், நீதிமன்ற உத் தரவு அம் முடிவைத் தடுத்தது.

எதிர்க்கட்சியான தொழிற்கட்சிக்குள் இணைந்திருப்பதற்கான ஆதரவு கணிசமாக இருந்தது. வாக்கெடுப்பின்போது தொழிற் கட்சி ஆதரவு தொகுதிகள் பல விலகுவதற்கு ஆதரவாக வாக் களித்தன. அதே போல இணைந்திருப்பதற்கு ஆதரவாகவும் வாக்களித்திருந்தன. சமீபத்தில் பிரித்தானிய அரசு தாம் பிர மாணம் 50 இனைப் பயன்படுத்தப் போவதாக பாராளுமன்றத் தில் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அத் தீர்மானத்தை ஆதரிக்கப்போவதாக கட்சியின் உயர்மட்டம் தீர்மானித்தது. இது தொழிற்கட்சியின் பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரச்சனையாக அமைந்தது.

பல உறுப்பினர்களின் தொகுதிகள் இணைந்திருப்பதற்கு ஆதரவாக வாக்களித்த நிலையில், கட்சியின் உயர்பீடம் விலகுவதற்கு முயற்சிக்கும் பிரமாணம் 50 இனை ஆதரிக்க எடுத்த முடிவு கட்சியின் முடிவை ஆதரிப்பதா? அல்லது தொகுதி மக்களின் முடிவை ஆதரிப்பதா? என்ற சிக்கலான நிலைக்கு உறுப்பினர்களைத் தள்ளியது. பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு வந்தபோது 229 உறுப்பனர்களைக் கொண்ட தொழிற்கட்சியின் 47 உறுப்பினர்கள் கட்சியின் முடிவுக்கு எதிராக, சில முக்கிய அமைச்சர்கள் உட்பட வாக் களித்தனர். மொத்தத்தில் 498 உறுப்பினர்கள் ஆதரவாக வும், 114 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்து தீர்மானம் நிறைவேறியது.

இதில் தமிழர்கள் பிரச்சனை எங்கிருக்கிறது? என நீங்கள் வினவலாம். சற்று பொறுமையோடு படியுங்கள்.

தற்போது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதற்கு பிரித்தானியா முடிவு செய்துள்ளது. பிரித்தானியர்கள் பலர் ஐரோப்பாவில் வாழ்கின்றனர். ஐரோப்பியர்கள் பலர் பிரித் தானியாவில் உள்ளனர். இவர்களின் எதிர்காலம் என்ன? இதுவரை தெளிவில்லை. இந்த ஐரோப்பியர்களுள் கணிச மான தமிழர்கள் தமது பிள்ளைகள் ஆங்கிலக் கல்வியைக் கற்கவேண்டும் என விரும்பி தமது சேமிப்புகளை எடுத்து வந்து வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர். இவர்களுக்கு ஐரோப்பாவில் எதுவும் இல்லை. இவர்களின் எதிர்காலம் என்ன? இவர்கள் பிறப்பால் ஐரோப்பியர்கள் அல்ல. இவர்கள் அகதிகளும் அல்ல. ஏனெனில் இவர்கள் ஐரோப்பிய கடவுச் சீட்டை வைத்திருப்பவர்கள். ஐரோப்பாவில் இனவாதம் பல மாக உள்ளது. இந் நிலையில் இவர்களை ஐரோப்பியர்களாக இந்த அரசுகள் நடத்துமா? இத் தமிழர்கள் தமக்கென பல மான அமைப்பை உருவாக்க தவறியுள்ளார்கள். பல வெளி நாட்டவர்கள், புலம்பெயர்ந்தவர்கள் தத்தமது நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு அமைப்புகளை வைத்துள்ளனர். ஆனால் எம்மவர்கள் குறுகிய தேசியவாத அரசியல் சேற்றில் மூழ்கியுள்ளார்கள். அடுத்த இரண்டு வருடங்கள் மிகவும் சிக்கலானவை. இப் பிரச்சினை தனியாக கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

## புரட்சி வந்தால் எல்லாமே தீரும் - ஜே.வி.பி

சமீபத்தில் இலங்கையின் மிக முக்கிய அரசியல் கட்சியாகிய ஜே வி பி இன் அரசியல் குழு உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான விஜேய ஹேரத் அவர்கள் லண்டன் வந்திருந்தார். அவரை அழைத்து எனது தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தேசிய இனப் பிரச்சனையில் தெளிவான கொள்கைப் போக்கைக் கொண்டிராவிடினும், தேசத்தில் சாமான்ய மக்களின் நல்வாழ்விற்காக குரல் கொடுக்கும் அமைப்பாக நாம் கருதினோம்.

இக் கூட்டத்தில் அவர் புதிய அரசியல் அமைப்பு மாற்றத்தில் தமது பங்கு, தேசிய இனப் பிரச்சனை குறித்த அவர்களது பார்வைகள் குறிப்பாக அவர்கள் அதிகார பரவலாக்கத்தினை எதிர்ப்பதாக தெரிவித்தமையால் அதற்கான காரணங்கள், மாற்றுத் தீர்வுகள், இலங்கையில் இந்திய, சீன, அமெரிக்க தலையீடுகள் குறித்து அவர்களது பார்வை போன்ற அம்சங்கள் குறித்து நாம் அதிகம் எதிர்பார்ப்பதாக தெரிவித்தோம்.

மிகவும் தெளிவான தமிழில் பேச ஆரம்பித்த அவர் பின்னர் ஆங்கிலத்தில் உரையாற்றினார். அவரது உரையில் இனங்களுக்கு அதிகார பரவலாக்கத்தினை வழங்குவது அவர்களின் வாழ்வை உயர்த்த உதவாது என்றும் அது மீண்டும் குழப்பமான அரசிலை நோக்கியே தள்ளும் எனவும் கூறினார். தனி மனிதன் சுயாதீனமாக செயற்படுவதற்கான சமத்துவமான சுதந்திரம் கிடைத்தால் மாத்திரமே அவர்களது வாழ்வு உயர முடியும் என்றார். அவர் தனிமனித சுதந்திரத்தை வற்புறுத்துகிறாரா? என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்ளும் ஒரு கட்சி அரசியல் அமைப்பு வழிகள் மூலமே பிரச்சனைகளுக்கான தீர்வுகளை எட்ட முடியும். ஆவ்வாறானால் அரசியல் அமைப்பு வழிகள் மூலம் தற்போது தீர்வுகள் காண முனையும்போது தனிமனித சுதந்திரம் பற்றிப் பேசுவது குழப்பமாக உள்ளது. ஏனெனில் இலங்கையில் முதலாளித்துவ கட்டமைப்பை வலுப்படுத்தும் பாராளுமன்ற ஆட்சியில் தாமும் பங்குதாரராக உள்ள இக் கட்சியினர் பாராளுமன்ற ஆட்சியில் அர்த்தமுள்ள - சமத்துவமான தனிமனித சுதந்திரம் சாத்தியம் என நம்புகிறார்களா?

அதிகார பரவலாக்கம் பன்மைத்துவ ஜனநாயத்தை வலுப்படுத்தும் வழிமுறையாகும். பெரும்பான்மையினர் - சிறுபான்மையினர் என அரசியற் சிக்கல்கள் முனைப்படைந்திருக்கும் ஒரு நிலைமையில் ஒவ்வொரு தேசிய இனத்தவரதும் சமூக அடையாளம், பொருளாதாரம் மற்றும் வாழ்வாதார பாதுகாப்புகள், கலாச்சாரம், மொழி, பண்பாடு ஆகியனவற்றை பேணுவதற்கு விசேட அரசியல் ஏற்பாடுகள் காணப்படுவது தேசத்தின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு அவசியம் எனக் கருதப்படும் காலமிது. கூட்டு வளர்ச்சியை ஊக்கும் அதிகார பரவலாக்கத்திற்குப் பதிலாக தனிமனித சுதந்திரத்தை மட்டும் உறுதிப்பத்துவது போதுமானால் - அதுவே சர்வரோக நிவாரணியாகுமானால் தொழிற்சங்கங்கள் கூட தேவையில்லை என ஆகிவிடும்.

தனிமனித சுதந்திரத்தை வலியுறுத்துவதன் மூலம் ஜே வி பி இனர் தமது புரட்சிகர அரசியல் சிந்தனைகளுக்கும், பாராளுமன்ற அரசியல் வழிமுறைகளுக்குமிடையே இணக்கத்தைக் காண தவிப்பதாகவே தெரிகிறது. இதனால்தான் அவர்கள் ஒரு நீண்டகால ரீதியான அரசியற் போக்கை நிர்ணயிக்கும் பாத்திரத்தை வகிப்பதற்கு மாறாக, தனியாக புறம்பாக நின்று அவ்வப்போது மகிந்தவை, ரணிலை, மைத்திரியை ஆதரித்தும், எதிர்த்தும் செயற்படுகின்றனர். இதனால் தேசிய இனப் பிரச்சனையில் தெளிவான நிலைப்பாட்டை தர முடியவில்லை. இதனை நாம் புரிந்துகொள்கிறோம். அவர்கள் தம்மை தீர்மானகரமான சமூக ஜனநாயகவாதிகளாக அடையாளம் காட்டாத வரை அவர்களிடையே இக் குழப்பம் நீடிக்கலாம்.

## இங்கிலாந்து நீதிமன்ற தீர்ப்பு இலங்கைக்கு வழிகாட்டுமா?

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலக வேண்டும் என அந்த ராஜ்ஜியத்தின் மக்களிற் பெரும்பான்மையினர் வழங்கிய முடிவு தொடர்பாக இங்கிலாந்தின் உச்ச நீதிமன்றம் கூறியுள்ள தீர்ப்பினால் அந்த நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளை இலங்கையின் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதோடு சற்று பொருத்திப் பார்ப்பது பயனுடையதாகும்.

புதிய அரசியல் யாப்பினை மக்கள் வாக்கெடுப்பிற்கு விடுவதா? என்பதில் தற்போது இலங்கை அரசாங்கம் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது. ஏனெனில் அது தோல்வியில் முடிவடை யலாம். எனவே பாராளுமன்றத்தினூடாக மட்டும் புதிய அரசியல் யாப்பினை நிறைவேற்றுவது பற்றி இலங்கை அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்ற கருத்து வலுவடையத் தொடங்கியுள்ளது.

அவ்வாறானால் பாராளுமன்றமே இறுதி முடிவை மேற்கொள்ளும் சபை என்ற முடிவுக்கு நாம் வரவேண்டும். இதனையே பிரித்தானிய உயர் நீதிமன்றம் உரைத்திருக்கிறது. பிரித்தானியாவில் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்திய பின்னர் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் பாராளுமன்றத்திலுள்ள பெரும் பான்மையினரின் தீர்மானம் மக்கள் வழங்கியுள்ள அபிப்பிராயத திற்கு மாறாக செல்லாம் என்ற கருத்துக்களும் உள்ளன.

நாட்டின் எதிர்கால அரசியல் - பொருளாதார நன்மைகள் கருதி மாற்றங்களைப் பாராளுமன்றம் மேற்கொள்ளலாம் என்பதே வலு வடைந்து வரும் அபிபபிராயமாகும் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தினாலும் பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்கவேண்டும் என் கிறது பிரித்தானியா. 48 சதவீத பிரித்தானிய மக்கள் இணைந் திருக்க வாக்களித்தார்கள், அம் மக்களின் குரலுக்கு ஜனநாயகம் தரும் மதிப்பை பாராளுமன்றம் பரிசீலனை செய்ய வேண்டும் என்கிறது பிரித்தானியாவின் நீதி.


இலங்கையின் பெரும்பான்மையான - குறிப்பாக அனைத்து இனங்களினதும் ஆணையுடன் - புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் என்ற வாக்குறுதியைத் தந்த மைத்திரியின் ஆட்சியையே மக்கள் தெரிவு செய்தார்கள். புதிய அரசியல் யாப்பை பாராளுமன்றமே இறுதி முடிவு செய்வ தற்கு ஏற்கனவே மக்கள் ஆணை கிடைத்திருக்கிறது. மீண்டும் மக்கள் அபிப் பிராயம் என்ற பெயரில் தேசம் தழுவியதோர் குழப்பம் அவசியம் தானா? இந்த ஆட்சியாளர்களின் அரசியல் விஞ்ஞாபனத்தை ஏற்று தேர்வு செய்த மக்களின் பொது அபிலாஷைகளுக்கு வழங்கும் மதிப்பு என்ன? தேசத்தின் எதிர்கால நன்மைகளுக்கு பொருத்தமான - சரியான - முறையான ஓர் அரசியல் யாப்புக்கான இறுதி முடிவை பாராளுமன்றமே மேற்கொள்ள வேண்டும் என்பதில் தயக்கம் காட்டுவது அவசியம்தானா என்பதை அரசியற் தலைவர்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ரிக்கிரி கொப்பேகடுவ


ரிஸ்ஸ பலல்ல


குமாரி பாலசூரிய


மொகான் விஜயவிக்கிரம


ஜி. ஏ. சந்திரசிறி


கருணாரத்ன டிவுல்கனே

# அதிகாரப் பகிர்வுக்கு எதிராக முன்னாள் ஆளுநர்கள்


நந்தா மத்தியூ


ஜகத் பாலசூரிய

**2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி இலங்கையின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனா அவர்கள் பதவி ஏற்றதிலிருந்து கடந்த சில மாதங்கள் வரை இலங்கை குடியரசுக்கு ஒரு புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் அதில் தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார அபிலாசைகளுக்கு கணிசமாக இடமளிக்கப்படும் என்ற பெரும் நம்பிக்கை தமிழ் மக்களிடையே இருந்து வந்தது. ஆனால் இலங்கையில் அண்மைக்காலங்களாக ஏற்பட்டு வரும் அரசியல் நிலைமைகள் தமிழ் மக்களின் நம்பிக்கைகளை சிதறடிக்கும் வகையாகவே உள்ளன.**

**1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தை தொடர்ந்து இலங்கையின் அரசியல் யாப்பு 13 வது தடவையாக திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டு மாகாண சபைகள் அமைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.**

### அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநர்களுக்கே மக்களுக்குப் படம் காட்ட மாகாணசபைகள்

கடந்த காலங்களில் இருந்து வந்த அரசாங்கங்கள் எதுவும் 13 வது திருத்தப்படி வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய மாகாண சபைகளை சட்டரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் செயற்பட விடவில்லை என்பது அனைவரும் அறிந்ததே. 13வது அரசியல் யாப்பு திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபைகள் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு போதிய தீர்வாக அமைய்வில்லை என்பதனை பிரேமதாசா தொடக்கம் சந்திரிகா பண்டாரநாயக்கா உட்பட மஹிந்த ராஜபக்ஸ வரை அனைத்து ஜனாதிபதிகளும் ஒப்புக்கொண்டே வந்தனர் ஆகவே தான் அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் ஆட்சிக்காலத்தில் முன்னேற்றகரமானதொரு அதிகாரப்பகிர்வு முறையை உருவாக்க முயற்சிப்பதாகக் கூறி பாராளுமன்ற தெரிவுக் குழுக்களையும், அதிகாரப்பகிர்வு ஆய்வுக் கமிட்டிகளையும், அரசியல் யாப்பு சட்ட நிபுணத்துவம் கொண்டவர்களின் ஆலோசனைக் கமிட்டிகளையும் அமைத்தனர். அதிகாரப் பகிர்வுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன - சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன - அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஆனால், 20 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் நடைமுறையில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

மாறாக, 13 வது திருத்தத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கூட மாகாணசபைகளுக்கு வழங்கவில்லை. மாகாணசபைகளை காத்திரமற்ற நிறுவன அமைப்பாக வைத்திருப்பதிலேயே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் அக்கறை காட்டிவந்துள்ளன. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள், வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மாகாண சபைகளைச் செயற்படுத்துவதற்கு மாறாக அரசாங்கங்கள் மாகாண ஆளுநர்களையே நிறைவேற்று அதிகாரங்கள் உடையவர்களாக ஆக்கி மாகாணசபைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தன. நாட்டில் நிலவிய யுத்தச் சூழலும் அவசரகாலச்சட்டமும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபைகளை அர்த்தமற்றவையாக ஆக்குவதற்கு மேலும் வாய்ப்புக்களை வழங்கின.

### மாகாண சபைகள் இருக்கு ஆனால் இல்லை! அவை இல்லை ஆனால் இருக்கின்றன! புரியலையா? புரியுது ஆனால் புரியலையே!

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் ஆயினும் - குறைந்தபட்சம் 2012 ஆம் ஆண்டு அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட பின்னராயினும் அரசியல் யாப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட அதிகாரங்களுடன் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபைகள் சுயாதீனமாக செயற்படுகின்ற நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறான நிலைமைகளே செயற்பட்டன.

யுத்த வெற்றிக்களிப்பில் மிதந்த மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கம் 18வது அரசியல் யாப்பு திருத்தம், திவிநெகும சட்டம் போன்றவற்றால் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மேலும் பலவீனப்படுத்தியது.

2015 ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட அரசியல் மாற்றம் மாகாணசபைகளின் செயற்பாடுகளில் சில முன்னேற்றங்களை எற்படுத்தியதாயினும், முன்னைய காலங்களில் சட்ட ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் மாகாணசபைகள் பலயீனப்படுத்தப்பட்டிருந்த நிலையிலிருந்து முற்றாக மீளவில்லை. சரியான திசைவழி நோக்கி அரசியல் யாப்புக்குரிய முறையான அர்த்தங்களில் மாகாணசபைகள் செயற்படும் என்ற எதிர்பார்ப்பு நடைமுறையில் உண்மையாகவில்லை.

மாகாணசபைகள் சட்டபூர்வமான தளத்தில் சுயாதீனமானவையாக செயற்படும் நிலைமையை எற்படுத்துவதற்கு மாறாக பிரதம மந்திரியினதும் மற்றும் அமைச்சர்களினதும் கருணைக்கும், தயாள விட்டுக் கொடுப்புக்கும் உட்பட்டவையாகவே செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளன.

### ஆளுநர்களுக்கே மாகாண அதிகாரங்கள்! கோஷமிடும் முன்னாள் ஆளுநர்கள்!

அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான மக்கள் கருத்தறியும் அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையும் அதனையொட்டி பாராளுமன்ற உப குழு வெளியிட்டு உள்ள அறிக்கையும் மாகாணசபைக்கான அதிகாரங்கள் விடயத்தில் பல முன்னேற்றகரமான தெரிவுகளை வெளிப்படுத்தியிருந்தன.

அவ்வாறு வெளியிடப்பட்ட சிபார்சுகளுக்கும் தெரிவுகளுக்கும் எதிராக சிங்கள இனவாத சக்திகள் வெவ்வேறு முகங்களுடன் தலைதூக்கி உள்ளன. அதிகாரப்பகிர்வை முற்று முழுதாக அர்த்தமற்றதாக்குவதே இந்த இனவாத சக்திகளின் நோக்கமாக உள்ளது. அதில் ஒன்றுதான் ராஜபக்ஸ ஆட்சிக் காலத்து முன்னாள் ஆளுநர்கள் வெளியிட்டுவரும் கருத்துக்கள்.

அவர்களின் கருத்துக்களின்படி மாகாண ஆளுநர்களே பூரண அதிகாரம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் வெறுமனே ஆலோசகர்களாக மட்டுமே செயற்பட வேண்டும். அவர்களின் எந்த ஆலோசனையும் ஆளுநர்களைக் கட்டுப்படுத்தக் கூடாது என்பன முன்னாள் ஆளுநர்களின் பிரசார கோரிக்கைகளாக உள்ளன.

முன்னாள் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, முன்னாள் வட மேற்கு மாகாண ஆளுநர் ரிஸ்ஸ பலல்ல முன்னாள் தென்மாகாண ஆளுநர் குமாரி பாலசூரிய, முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் மோகன் விஜய விக்கிரம முன்னாள் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி முன்னாள் வட மத்திய மாகாண ஆளுநர் கருணாரத்தின டிவுல்கனே, முன்னாள் வட மத்திய மாகாண அளுநர் ஜகத் பாலசூரிய, முன்னாள் ஊவா மாகாண ஆளுநர் நந்தா மத்தியூ ஆகியோரே மேற்படி கோரிக்கைகள் கொண்ட கடிதத்தை கூட்டாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

### மற்றவர்கள் கேட்டால் அது மண்குடம் தங்களுக்கென்றால் அது பொன்குடம்

இதுகாலவரை சிங்கள இனவாத சக்திகள் அரசியல் யாப்பின் 13 வது திருத்தம் இந்தியாவினால் திணிக்கப்பட்ட ஒன்று எனவும், மாகாணசபைகள் இலங்கைக்கு அவசியமே இல்லாத வெள்ளை யானைகள் என்றும் கூறிவந்தனர். இப்போதுள்ள அரசாங்கம் புதியதொரு அரசியல் யாப்பின் ஊடாக முன்னேற்றகரமான அதிகாரப் பகிர்வு முறையொன்றை அறிமுகப்படுத்த முயற்சிகளில் இறங்கியவுடன் அதற்கு கட்டைபோடும் இலக்குடன், 13வது திருத்தத்தை ஏதோ புனிதமான ஒன்று போலவும், அதனை தாங்கள் இது நாள் வரை முறைப்படி முழுமையாக கடைப்பிடித்து வந்தது போலவும் உரத்துச் சொல்லத் தொடங்கி உள்ளனர்.

இந்த இனவாத சக்திகளின் நோக்கம் மாகாண சபைகளை இலங்கையின் ஆட்சி அமைப்பு முறையில் இருந்து முற்றாக இல்லாமற் செய்வதே ஆகும். அதற்கு முன்னாள் ஆளுநர்களும் முண்டுகொடுக்க இப்போது ஒன்று திரண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ராஜபக்ஸ ஆட்சிக்காலத்தில் தாங்களே மாகாண அரசர்கள் போல அதிகாரங்களை அனுபவித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- காஞ்சி அம்மான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ மாணவர்களின் போராட்டம் எதனால் தோற்றுப் போனது

இதுவரை தென்னாசியாவின் தரமான மருத்துவ சேவை நிலவும் நாடுகளில் ஒன்றான இலங்கையின் மருத்துவ சேவைகளின் கட்டிறுக்கமும் தரமும் மிக்க செயற்பாடுகளில் தரமற்ற மருத்துவர்களை உற்பத்தி செய்யக்கூடிய முதலாளித்துவ மருத்துவர்களின் உற்பத்திக்கூடங்களுக்கு மேன்மை தங்கிய இலங்கை சனநாயக சோசலிசகுடியரசின் நீதித்துறை அங்கீகாரம் அளித்துள்ளது. அதாவது இதனை இன்னொரு வகையில் சொன்னால் தரமற்ற மருத்துவத்தின் இடைவருகைக்கு எதிராக போராடிய இலங்கை மருத்துவ உலகம் தனது போராட்டத்தில் தோற்றுப்போயுள்ளது.



- யதார்த்தன் -

ஒரு நிஜமான மக்கள் போராட்டம் என்பது சின்ன அசைவினைக் கூட ஏற்படுத்தாமல் எப்போதும் தோற்றுப்போகாது - அது குழாயில் தண்ணீர் வரவில்லை என்பதில் தொடங்கி பெரும் விடுதலைப்போராட்டம் வரை பொருந்தும், அசலான ஒரு மக்கள் போராட்டத்திற்கு கண்முன்னே உருத்திரளும் வெற்றியென்பது கிடைக்காமல் போகலாம் ஆனால் அது முழுவதுமாக இறந்து போகும் ஒன்றல்ல. அதன் தொடர்ச்சியென்பது இருந்தபடியே இருக்கும். அதன் ஒற்றைப்பொறியேனும் மீண்டும் ஒரு பெரு நெருப்பை தனக்குள் வைத்தபடி காத்திருக்கும். ஆனால் இலங்கை முழுவதும் முன்னெடுக்கப்பட்ட தனியார் மருத்துவத்திற்கு எதிரான போராட்டம் இவ்வளவு மோசமாக கண்முன்னே நீத்துப்போக என்ன காரணம்?

தனியார் மருத்துவ கல்வியின் வருகைக்கு எதிராக போராட வேண்டும் என்று முடிவெடுத்த , இலங்கை முழுவதும் உள்ள குழுக்கள் (மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள்) தாங்கள் ஏன் தோற்றுப்போனார்கள் என்பதை இப்போது ஆராய வேண்டும்.

> இக் கட்டுரையாளர் திரு. யதார்த்தன். மருத்துவபீட மாணவர் போராட்டம். ஜல்லிக்கட்டுப் போராட்டம். பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்டதையொட்டி நடந்த மாணவர் நடவடிக்கைகள் போன்ற பொது நிலைப்பட்ட போராட்ட நடவடிக்கைகளில் தானும் பங்கு பற்றியதோடு அவை தொடர்பாக மிகக் கவனத்திற்குரிய கருத்துகளையும் துணிச்சலோடு முன்வைப்பவர்.

## தனியார் மருத்துவக் கல்லூரிகள் வியாபாரமே

இது மாதிரியான தனியார் மருத்துவ கல்லூரிகள் என்பவை வெறும் சிறு குழுமத்தால் இயங்கும் அமைப்புக்கள் அல்ல. வெளித்தோற்றத்தில்தான் அது அவ்வாறு தெரியும். உண்மையில் பெரும் தனியார் கம்பனிகள் என்பவை இந்த அரசினால் காவல் காக்கப்படும் பொன் முட்டை போடும் வாத்துகள். அவை ஒப்பீட்டளவில் குழந்தைகள் போல் தோன்றலாம். ஆனால் அவை அரசின் குழந்தைகள். அவற்றை எதிர்த்து இல்லாமல் செய்ய மக்கள் குரலால் மட்டுமே முடியும். அந்த மக்களின் கூட்டுக் குரலை எப்படி உருவாக்குவது என்பதை அறியாமலே தோற்றுப் போயாகிவிட்டது. மக்களின் குரலை திரட்டுவது என்பது சினிமா ஒன்றை பார்க்க மக்களை அழைப்பது போலில்லை, அது ஒரு வகையான வாழ்க்கை முறை. அந்த வாழ்கை முறையை கடைப்பிடித்து மக்களை திரட்டுவதில் போராட்டக்காரர்கள் தவறிவிட்டார்கள்.

அரச மருத்துவ கல்வி அரச மருத்துவ சேவையில் இருப்பவர்கள் இந்த பிரச்சினையை மக்களிடம் சொல்வதற்குரிய ஆன்ம பூர்வமான மனத்தினைக் கொண்டிருந்தார்களா? அதற்குரிய வாழ்க்கை முறை போராட்டக்காரர்களிடம் இருந்ததா?

## மருத்துவர்களைக் கண்டு மிரளும் மக்கள்

இந்த போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் பிரதானமானவர்கள் இலங்கை அரச மருத்துவக்கல்வித்துறையில் இருந்து அரச மருத்துவத் துறைக்குள் நுழைந்தவர்களும், நுழையப்போகின்றவர்களும். குறிப்பாக பலகலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள். அதாவது பிரச்சினையின் வீரியத்தை அசலாக விளங்கிக் கொள்ளக்கூடிய தரப்பு. இத்தரப்பு என்பது சமூக மட்டத்தில் மிக மதிப்பு மிக்க உயர் குழாமாக தங்களைக் கருதிக்கொள்ளும் அமைப்பு. "டொக்கரிட்டையும் வக்கீலிட்டையும் பொய் சொல்லக் கூடாது" என்னும் அளவிற்கு மக்கள் நம்பிக்கை வைக்கும் ஒரு குழாமாக அது இருக்கின்றதா?. அப்படிப்பட்ட ஒரு குழாம் அழைப்பு விடுத்தும் ஏன் மக்கள் வரவில்லை? உண்மையில் மக்களிடத்தில் மருத்துவர்கள் சேவை வழங்குனர்களாக கருதப்படுகின்றார்களா?

தனிப்பட்டரீதியில் மக்கள் மருத்துவர்களை தற்காலத்தில் எப்படிப் பார்க்கின்றனர் என்பதனை மருத்துவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். எனக்குத் தெரிந்து மருத்துவர்கள் என்போர் மக்களைப் பொறுத்தவரை வியாபாரிகளே. முன்பு இலவச மருத்துவம் அல்லது மக்கள் நலன்புரி மருத்துவமாக இருந்த அரச மருத்துவம் மக்களால், போற்றுதலுக்குரிய மதிப்புக்குரிய ஒன்றாக இருந்தது. ஆனால் அது உலக மருந்து மாபியாக்களின் ஏஜண்டுகளெனவும், பணம் பண்ணும் தனியார் மருத்துவ மனைகளின் கைக்கூலிகள் எனவும் மக்கள் மருத்துவர்களைக் கண்டுகொள்கிறார்கள்.

## மனித நேயம் இல்லாத மருத்துவம்

அரச மருத்துவ மனைகளில் லைனில் நின்று காணமுடியாத வைத்தியர்களை தனியார் கிளினிக்குகளில் மக்கள் இலகுவாகக் கண்டு கொள்கிறார்கள், அரச மருத்துவமனைகளில் சிடு சிடுக்கும், மருத்துவர்களின் இறுக்கமான முகங்கள் தனியார் மருந்தகங்களில் புன்னகையுடன் மக்களை வரவேற்கின்றன. மக்களுக்கு மிக நெருக்கமாக இருந்த வைத்தியர்களையும் மக்களையும் ஏசி போட்ட கார் கண்ணாடிகள் பிரித்து விட்டன. வைத்தியர்கள் ஒரு சேவைசார் தொழில் செய்பவர்களாக இல்லாமல் ஒரு தனியான முதலாளித்துவ வர்க்கமாக மாறி விட்டார்கள். எங்கோ ஒரு சில மருத்துவர்களை தவிர சேவை நிலையில் இருந்த மருத்துவம் வியாபார நிலைக்கு மாறிவிட்டது. மக்கள் ஒரு பல சரக்கு கடை முதலாளியிடம் நல்ல அரசியை வாங்கி விட வேண்டும் என்ற கரிசனையுடனான உரையாடலையே மருத்துவர்களோடும் மேற்கொள்கின்றனர். மக்களின் மனங்கள் இப்படியிருக்க திடீரென்று மருத்துவர்கள் மக்களுக்கு பிரச்சினை வரப்போகின்றது. ஏழைகள் பாதிக்கப்படப் போகின்றார்கள். என்றால் மக்கள் நம்பிடுவிடுவார்களா என்ன?

மருத்துவர்களே! எக்ஸ்ரே மிசின் பழுதாகிப் போனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நீங்கள் அரசிடம் எக்ஸ்ரே மிசின் வேண்டும் என்று போராடியிருக்கிறீர்களா? சிம்பிளாக துண்டு சீட்டில் ஆயிரக்கணக்கில் வெளியில் எக்ஸ்ரே எடுத்து வரச் சொல்லி அனுப்பி விடுகின்றீர்கள்! சில லட்சம் முதலுடன் இயங்கும் தனியார் மருந்து கடைகளில் கிடைக்கும் மருந்து அரச மருந்தகத்தில் இல்லை என்று ஏன் நீங்கள் குரல் கொடுக்கவில்லை – ஏன் சீட்டெழுதி வெளியில் வாங்கச் சொல்கின்றீர்கள்? ஏன் இது மக்கள் பிரச்சினையில்லையா?

## முதலாளிக்கு தொழிலாளி தோழனாவானா!

சரி! மக்களை விட்டு விடுவோம்! மருத்துவ துறையையே எடுத்துக்கொள்வோம்! மருத்துவ துறைக்குள்ளேயே மருத்துவர்கள் ஒரு வர்க்கமாகத்தானே தொழில்படுகின்றார்கள். தாதிகள் தங்களுக்கு ஒரு பிரச்சினை என்று போராடும் போதோ, மருத்துவ துறை சார் விளிம்பு நிலை தொழிலாளிகள் தங்கள் பிரச்சினைக்காக போராடும் போதோ மருத்துவர்கள் ஒற்றைக்குரலாவது கொடுத்திருக்கின்றார்களா?

அடிப்படையில் ஒரு விடயத்தை புரிந்துகொள்ளுங்கள் , தனியார் மருத்துவ கல்லூரிகள் வருவது மக்களுக்கு ஆபத்துதான். ஆனால் அதை ஏன் மருத்துவர்களால் மக்களிடம் சொல்லி மக்கள் குரலை திரட்ட முடியவில்லை. ஏனென்றால், திடீரென நீங்கள் மக்களுக்காக குரல் கொடுப்பதன் பின்னணியில் உள்ள சுயநலம் மட்டுமே - உங்களுடைய தொழில் பாதிக்கும் என்ற பயம் மட்டுமே - உங்களுடைய உயர்குழாம் நிலை, மிகச் சுலபமாக பகிர்ந்து கொள்ளப்படப் போகின்றதே என்ற கவலை மட்டுமே! அதனால் இந்த விடயத்தை மக்களுக்கு புரியும் குரலில் உங்களால் பேச முடியவில்லை. அதற்கான வாழ்க்கை முறை பெருவாரியான மருத்துவர்களிடம் இல்லை. இப்படியிருக்க, மக்கள் மயப்பட்ட ஒரு போராட்டத்தை மருத்துவர்களாலோ அல்லது மருத்துவர் ஆகப்போகின்றவர்களாலோ எப்படி உருவாக்க முடியும்.

துறைசார்ந்தோ, துறைக்கு வெளியிலோ மக்கள் போராடும் போதும், அல்லல்படும் போதும் ஒரு சில மருத்துவர்களை தவிர, பெருவாரியான மருத்துவர்களின் பொதுக்குரல் எங்காவது ஒலித்ததுண்டா? வன்னியில் இருக்கும் போது, போர்க்காலங்களில் சம்பளம் கூட வாங்காமல் இயங்கிய ஏராளம் மருத்துவர்களைப் பார்த்திருக்கிறேன். இங்கும் சேவை நோக்கோடு வேலை செய்யும், சமூக அக்கறை கொண்ட மருத்துவர்களை எனக்குத் தெரியும் இங்கே அவர்களின் எண்ணிக்கை அளவு மிகச்சொற்பமானது தான். ஆனால் பெருவாரியாக மருத்துவத்துறையினர் மக்களின் ஆன்மாவில் இருந்து மிகத்தொலைவாகவே இருக்கின்றனர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஒரு சான்று

அடுத்து மருத்துவர்கள் ஆகப்போகின்றவர்களும் இந்த போராட்டத்தை முன்னெடுத்தவர்களுமான மருத்துவ மாணவர்களை பார்க்க வேண்டும். யாழ்ப்பாணத்தையும், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தையும் சேர்ந்த மாணவர்களை எடுத்துக்கொள்வோம். முதலில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தில் மருத்துவ பீடத்தின் இயங்கு முறைமை எப்படிப்பட்டது என்பதனை விளங்கிக்கொண்டால், அவர்களால் ஏன் மக்களை திரட்ட முடியவில்லை, சகபீடங்களை சேர்ந்த மாணவர்களைத் திரட்ட முடியவில்லை என்பது விளங்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினைப் பொறுத்தவரை மருத்துவ பீடம் என்பது அமைந்திருக்கும் இடத்தாலும் சரி வளத்தாலும் சரி, மாணவ மனநிலையாலும் சரி, தனியாக தன்னை தகவமைத்துக்கொண்ட ஒன்று. இங்கு மருத்துவ பீட மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் ஏனைய பீட மாணவர்கள் முன்னெடுக்கும் எந்தப் போராட்டத்திலும் பங்கு பற்றியது கிடையாது. குறைந்த பட்சம் ஒரு அறிக்கையைக்கூட விடுவதில்லை. சக பீட மாணவர்களுடன் பழகுவது கிடையாது. பல்கலைக்கழக மாணவர்கள் சுடப்பட்ட போதும் கூட போராட்டத்தில் தனிப்பட்டரீதியில் கலந்து கொண்ட ஒரு சிலரைத்தவிர பெரும்பான்மையான மாணவர்கள் லீவு எடுத்துக்கொண்டு வீடுகளுக்குப் போய்விட்டனர். கேட்டால்! படிப்பு, அசெய்ன்மெண்ட், கஸ்ரம், இது மெடிக்கல்! சும்மா இல்லை என்பார்கள்.

## ஐரோப்பிய மருத்துவம் உயர்சாதி ஆயிரம் ஆண்டுகால வைத்தியம் கீழ்சாதியா?

சுதேச மருத்துவ முறைகளான சித்த மருத்துவ, யுனானி மருத்துவ துறைகள் பல்கலைக்கழகத்திலும் சரி, வெளியில் வேலை செய்வதிலும் சரி பெரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. பட்டம் பெறுவதில் தொடங்கி தொடர்ச்சியாக தங்களின் பிரச்சினைகளுக்கு வலிமையான குரலற்று இருக்கின்றன, அவற்றிற்கு நீங்கள் குரல் கொடுத்து இருக்கின்றீர்களா? இப்போது எந்தமுகத்தை வைத்துக்கொண்டு அந்த மாணவர்களின் முன் போய் நின்று போராட வாருங்கள் என்பீர்கள்?

இப்படியிருக்க, மருத்துவ மாணவர்களின் குரலை எப்படி பலகலைக் கழகம் கேட்கும். ஒரே பல்கலைககழகத்தில் படிக்கும் மாணவர்கள் சுடப்பட்ட போது கூட தெருவுக்கு இறங்காதவர்கள், "ஐய்யகோ! ஏழைகள் பாதிக்கப்படுவார்கள்" "போலி மருத்துவம் வந்து விடும்" என்று கோசமிட்டால் அதனை நம்புமளவிற்கு பல்கலைக்கழக மாணவர்களும் சரி மக்களும் சரி முட்டாள்களல்ல.

அடிப்படையில் இவ்வகையான விடயங்களாலேயே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டம் மக்கள் மயப்படுத்தப்படாமல் தோற்றுப்போனது.

## மக்கள் போராட்டத்துக்கான பதாகைகள் மருந்துக் கடைகளுக்கான சீட்டுக்கள் அல்ல

இந்த தனியார் மருத்துவ கல்லூரிகளின் வருகையில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி தாங்கள் விளங்கிக்கொண்டவற்றை மக்களுக்கு சொல்ல ஒரு பதாகை வசனத்தைக்கூட எளிமையாக எழுதத்தெரியாமல் மருத்துவராகி என்ன செய்யபோகின்றீர்கள்! என்பதை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

சமூகத்திற்கும் உங்களிற்கும் இடையில் உள்ள இடைவெளியை விளங்கிக் கொள்ளுங்கள். ஏன்! அந்த இடைவெளி வந்தது என்பதனை யோசியுங்கள்! நீங்கள் சமூகத்தில் இருந்து பிரிந்து ஒரு உயர்குழாமாக மாறிப்போனதன் அபத்தத்தை மனம் கொள்ளுங்கள்.

ஆத்மார்த்தமாக இந்த பிரச்சினையை சுயநலம் இல்லாமல் அணுகத்தக்க வாழ்க்கை முறையினை கொண்டவர்களாக மருத்துவர்கள் இருந்திருந்தால் இலங்கை அரசை உலுப்பி விடக்கூடிய சக்தியுடையவர்களாக மருத்துவர்கள் இருந்திருப்பார்கள்.

> **தேனீ இணையத் தளத்திற்கு நன்றி - தேனீ இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட யதார்த்தன் எழுதிய கட்டுரை அவரது அர்த்தமும் நோக்கமும் மாறாது தொகுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

தி. சிறிதரன் 294. கண்டி வீதி. யாழ்ப்பாணம். அவர்களால் இல 78L காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் மணி பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org